351

Parithimarkalaignan Library Publication No. 2

18 OCT 1919

THE RAJPUT GEM.

An Historical Tamil Story.

BY
Mr. P. RAMACHANDRAN,
SON OF
Late P. A. Pranatharthihara Siva B.A.L.T.

PUBLISHED BY
V. S. NATARAJAN,
SON OF
Late V. G. Suryanarayana Sastriar B.A.,
735, Kakatope Street,
MADURA.

[...ts reserved.] 1919 [Price 5 Annas.

O-,3MRC8,R
N19
59868

ரஜபுத்திர ரத்தினம்

அச்சிடுவதற்காக நன்கொடை அளித்தவர்களின் நாமங்கள்.

ரூ. அ. பை.

1. மகா-ா-ஸ-ஸ்ரீ S. S. சூரியநாராயணசாஸ்திரியார் எம். ஏ. பி எஸ். ஸி. பிரின்ஸிபல், மதுரைகாலேஜ். 5—0—0

2. மகா-ா-ா-ஸ்ரீ திவான்பகதூர் P. R. நாராயண அய்யர் Deputy Director of Survey (Retired) 1—0—0

„ 3. V. S. ராமசுவாமி சாஸ்திரியார் வக்கீல் மதுரை. 1—0—0

„ 4. D. K. அனந்தபத்மநாப அய்யர் வக்கீல் மதுரை. 1—0—0

„ 5. S. சுப்ரமண்ய நாயனர் வக்கீல் சாத்தூர் 1—0—0

„ 6. D. K. வெங்கடேஸ்வரஅய்யர் சப்-மாஜிஸ்டிரேட். திண்டுக்கல். 1—0—0

„ 7. M. R. மகாதேவ அய்யர் மதுரை காலேஜ். 1—0—0

„ 8. R. சுந்தரம் ஐயங்கார் 0—8—0

„ 9. D. V. கல்யாண சுந்தரம் 0—8—0

„ 10. V. சுப்ரமண்ய அய்யர் மதுரை காலேஜ். 0—8—0

„ 11. A. ராமச்சந்திர அய்யர் 0—8—0

„ 12. B. S. அனந்தநாராயண அய்யர் ரிஜிஸ்டார் ஆபீஸ், சோளவந்தான் 0—8—0

இன்னும் இத்துடன் நான்கு அணா கொடுத்தவர்களும், பரிசுக்காகப் புத்தகம் அளித்தவர்களும் அநேகர் உளர்.

3 பரிதிமாற் கலைஞன் புத்தகசாலைப் பிரசுரம்:—௨

உ

சிவமயம்.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

ரஜபுத்திர ரத்தினம்.

ஓர் சரித்திரத் தமிழ்க் கதை.

இஃது

"அனுமான்சிங்" என்னும் துப்பறியும்
நாவல் இயற்றிய, காலஞ் சென்ற
பி. ஏ. பிரணதார்த்திஹர சிவனார், பி. ஏ. எல். டி,
அவர்கள் குமாரன்
பி. ராமச்சந்திரன்
எழுதியது.

சென்னைக் கிறிஸ்தவ கலாசாலைத்
தலைமைத் தமிழ்ப் பண்டிதராயிருந்த
வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.
அவர்கள் குமாரன்
வி. சூ. நடராஜன்
பதிப்பித்தது.

[விலை] 1919. [அணா 5.

COPY-RIGHTED BY,
V. S. NATARAJAN.
Parithi-mar-kalaignan Library.
735 Kakatope Street,
MADURA.

PRINTED AT THE EXCELSIOR PRESS,
CENTRAL MARKET STREET, MADURA.

முன்னுரை.

சென்னைக் கிறிஸ்தவ கலாசாலைத் தலைமைத் தமிழ்ப் பண்டிதராயிருந்த எந்தையார் ஸ்ரீமத், வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார். பி. ஏ. அவர்கள் ஞாபகார்த்தமாக "பரிதிமாற் கலைஞன் புத்தகசாலை" என்று ஒரு புத்தக சாலை ஏற்பட்டு, மூன்று வருடகாலமாக நடந்து வருவது யாவரும் அறிந்த விஷயம். அதன் முக்கிய நோக்கம் எவ்விதத்திலும் தமிழை விருத்திசெய்வதே.

நம் தமிழ்ப்பாஷையில் சரித்திர சம்பந்தமான நூல்கள் அதிகப்படவேண்டியது அவசியம். ஆகையால் சரித்திர சம்பந்தமான தமிழ்க்கதை எழுத ஒரு போட்டிப்பரீட்சை ஏற்படுத்தி, அதில் முதன்மையான கதை எழுதுபவர்க்கு "பரிதிமாற் கலைஞன் பரிசு" என்னும் பத்துரூபாய் பெறுமான ஒரு பரிசு அளிக்க ஏற்பாடு செய்து பத்திரிகைகளில் பிரசுரித்தனம். அவ்வாறே அநேகர் கதைகள் அனுப்பினர். அவைகளுள் முதன்மையானதைத் தேர்ந்தெடுக்க மூன்று தமிழறிஞர்களை வேண்டிக்கொண்டனம். அவர்கள் "ராஜ புத்திர ரத்தினம்" என்னும் இக்கதையே முதன்மையானது என்று மூவரும் ஏகோபித்துத்தேர்ந்தெடுத்தனர். ஆதலால் பரிசு இதன் ஆசிரியரான பி. ராமச்சந்திரன்அவர்களுக்கு அளிக்கப்பட்டது. எந்தையாரது மாணாக்கரான ஸ்ரீமத். பி. ஏ. பிரணதார்த்திஹர சிவனர். பீ. ஏ. அவர்கள் குமாரரான பி. ராமச்சந்திரன் அவர்களுக்கே இப்பரிசு கிடைத்தது எங்களுக்கு மிகவும் சந்தோஷத்தை உண்டுபண்ணுகிறது.

முதன்மையான கதையைத் தேர்ந்தெடுத்து எங்கட்கு மிகவும் உதவி புரிந்த, திருச்சி நாஷனல் காலேஜ் தலைமைத் தமிழ்ப் பண்டிதராகிய மகா-ா-ா-ஸ்ரீ ம. கோபாலகிருஷ்ணையரவர்கட்கும், கும்பகோணம் இலாகா பாடசாலை உதவிப்பரிசோதகராகிய மகா-ா-ா-ஸ்ரீ வே. மூத்துசாமி ஐயர். M. A. L. T. அவர்கட்கும், மதுரை ஹைக்கோர்ட்டு வக்கீலாகிய மகா-ா-ா-ஸ்ரீ R. S. நாராயணசாமி ஐயர். B. A. B. L. அவர்கட்கும் எங்கள் அன்பார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றனம்.

மற்றும் இப்புத்தகம் வெளிவர மெய்யாலும், பொருளாலும் மிக்க உதவி புரிந்த மகா-ா-ா-ஸ்ரீ வே. மூத்துசாமி ஐயரவர்களுக்கு நாங்கள் என்றும் கடமைப்பட்டுள்ளோம். இப்புத்தகம் வெளிவரப் பொருளுதவி செய்த அன்பர்கள் அனைவர்களுக்கும், இயன்றவாறு பிழையறவும், விரைவிலும் அச்சிட்டுத்தந்த மதுரை எக்ஸெல்ஸியர் பிரஸ் தலைவர் ஸ்ரீ; இ. மா. கோபாலகிருஷ்ணக்கோனார் அவர்களுக்கும், அதன் மானேஜர் வித்வான் ஸ்ரீ; நா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களுக்கும் மனமார்ந்தவந்தனம் அளிக்கின்றனம்.

இங்ஙனம்,

மதுரை,
25—9—19.

வி. சூ. நடராஜன்.
வி. சூ. சுவாமிநாதன்.

உரிமையுரை.

நிலமகள் தன்திரு நுதலெென நிலவும்
அமிழ்தினு மினிய தமிழ்மணங் கமழும்
பலமீக் கொண்ட பாண்டிநன் நாட்டில்
கலைஞர் மரபிற் களிப்புட னுதித்துக்
‡ 'கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக'வெனு நியதியைக்
கடைப்பிடி யாகப் பிடித்திடு பெரியோய்!
இயலிசை யென்ற இருகா லொடு நடை
பயிலுந் தமிழ்மகள் பலங்குன் றினளெனத்
தாயவள் தளர்வுறத் தாளாத் தனயன்
ஆயிருந் தவட்கே * ஆடும் அழகை
மூன்றுங் காலா யூன்றிட வளித்தோய்!
பேசுநற் குணத்துத் தேசுறு அண்ணல்!
கற்பினுக் கரசி கலாவதி சரிதம்,
பண்மொழி யுடைரு பாவதி சரிதம்,
இவைபோல் நூல்பல இயற்றிப் புகழே
ஊன்றி மிக்க வொளிபெற் றோங்க
உலகினுக் களித்து உதவிய தருவே!
ஆத்தும ஞான மறிந்தத னாலே
'சத்தாம் சீவன் தரணியி' லென்றும்
நீரி லெழுத்தை நேரு நரருடல்

‡ திருக்குறள். *ஆடும் அழகு = நாடகவியல்

என்று மறிந்து எழில் கொண் டனையால்
நாவல ருக்குத் தேவ ரெனும்பெயர்
கூவி யழைப்பர் குவலய மாந்தர்.
என்பதை யுன்னி இன்ன லளிக்கும்
பூவுல கிற்புகழ் போது நினக்கென
தேவ ருலகினைத் தேடி யடைந்தையோ?
எவ்வா றுயினும் ஏழையா னளிக்கும்
இவ்வரு நூலே இனிதேற் றிடுவாய்.
* பரிதிமாற் கலைஞ! பாவல ரேறே!!
பிருதிவி சரிதம் பிழைபல கொளினும்
‡ 'சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம்
பெரியோ ராகிற் பொறுப்பது கடனே'
என்று பெரியோ ரியம்பின ரதனுல்
இந்நூல் தன்னை 'இன்னூ' லெனவே
உரிமையை யேற்று உவப்பாய் நீயே.

20—9—1919.
மதுரை.

பி. ராமச்சந்திரன்.

---

* காலஞ் சென்ற வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார். பி. ஏ. ‡ வெற்றிவேற்கை.

அபிப்பிராயம்.

கும்பகோணம் கல்வி இலாகா சப்-அஸிஸ்டெண்டு
இன்ஸ்பெக்டராயிருக்கும்

வே. முத்துசாமி அய்யரவர்கள் M. A. L. T.
எழுதியது.

இச்சிறு கதை நூலை நான் முழுதும் படித்துப் பார்த்தேன். இது இனிய கதைப் போக்குள்ளதா யிருப்பதுடன், தெள்ளிய தமிழ் நடையில் அமைந் திருக்கிறது. இந்நூலில் ஆடவர், மகளிர் என்னும் இருபாலார்க்கும் இன்றியமையாத சில உயர்ந்த குணங் கள் தக்க சந்தர்ப்பங்களில் நன்கு விளக்கப்பட்டுள்ளன. இக்காரணங்களால் இது பள்ளிக்கூடச் சிறுவர்களுக்கு பாட புத்தக மாதற்கும் உரிய தகுதியுடையது. தமிழ்ப் பயிற்சியிலும், தமிழபிமானத்திலும் சிறந்த இரு கன வான்களுடைய வழித்தோன்றல்களாம் இரு வாலி பர்கள் இந்நூலை முறையே இயற்றியும், பதிப்பித்தும் இருப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சி யூட்டுகின்றது.

இங்ஙனம் அன்புள்ள,

19—9—1919
கும்பகோணம்.

வே. முத்துசாமி அய்யர்.

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
6	21	ஜயசந்தர்	ஜெயசந்தர்
21	8	விழித்தெழுந்ததும் அவன் பிராண நேசன், "நண்ப!	விழித் தெழுந்ததும், "நண்ப!
23	12	இவ் யுத்தத்தில் ஆ!	இவ் யுத்தத்தில்...ஆ!
24	9	அருகேலள்ள	அருகேயுள்ள
25	20	கட்டனேயிட	கட்டளேயிட
31	8	சுயம்வரத்திற்கு அங்குத் தம்	சுயம்வரத்தில் தம்
32	4	மதில் களில்லெல் லாம்	மதில்களி லெல்லாம்
36	15	வைப்பாஞ	வைப்பானே
38	14	அலங்கரித்து	அலங்கரித்தது
40	20	மீகமிருந்தவருள்	மீதமிருந்தவருள்
41	17	ஆனந்தப்	ஆனந்த
42	5	அனேகர்	அநேகர்
46	6	கொண்டிருந்தது.	குடி கொண்டிருந்தது.
47	2	விலிமை	வலிமை
,,	19	நோக்கவேண்டும்.	நோகவேண்டும்.
48	6	பிரிதிவியை	பிருதிவியை
,,	18	அவனென் செய் வான்	அவளென் செய்வாள்
,,	19	குற்றமல்லவோ	குற்றமல்லவே
50	11	கருகே ஓர்	கருகே
52	13	உத்தாதியாதலின்	உதித்தாயாதலின்
53	10	எணணத்தால்	எண்ணத்தால்
54	6	ராஜனேச் ஜெயசந் தனே	ராஜனே ஜெயசந்தனே
55	3	அதிற் ஜெயசந்தன்	அதில் ஜெயசந்தன்
,,	22	"சூரிய பிறைக்"	சூரிய "பிறைக்"

ரஜபுத்திர ரத்தினம்.

நற்பரிதி மாற்கலைஞ ஞாபகப்பேர்ச் சோதனைக்கே
சொற்பிருதி விச்சரிதம் சொல்லவே—பொற்சுருதி
நாவினிற் கொண்ட நளிர்பதுமன் நாவிளங்கும்
தேவியருள் தேர்வேன் தெளிந்து.

முதல் அத்தியாயம்.

மகுடாபிஷேகம்.

நிலமகட்கினிய திலகமாய் நின்று கலைபயில் மாந்தர் கணக்கிலார் வாழும் பாரதநாட்டுப் பல பாகங்களுள் இந்துஸ்தானம் என்னும் பிரிவில், ஆஜ்மீர் என்னும் ஓர் நகருண்டு. அந்நகரின்கண், அருமறை பயிலும் அந்தணர் தமக்கு அடுத்தபடியாய் எடுத்துரைக்கும் க்ஷத்திரியகுலத்தில் சர்வ வல்லவனாய், மநுநீதியினைத் தனதாயாக்கி, கொடையிற்சிறந்த கர்ணனுக் கிரண்டாவனாய், மாண்ட மன்மதன் இவனேயென்ன எவரும் புகழ்ந்திட எழில்மிகக் கொண்டு, மன்னுயிரனைத்தையும் தன்னுயிராகப் பாவித்து, ராஜாதிராஜரெல்லாம் முடிசாய்த்து அடிபணியும் பாதகமல

முடையவனும், போக போக்கியங்களில் குபேரனை யொத்துப் புகழினில் எவர்க்கும் நிகரிலாதவனுய்ப் பிருதிவியென்னும் பேரரசன் செங்கோல் செலுத்தி வந்தான். அவனது ஆட்சியில் பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என்பார் மூறையே காற்று, சுடர், திரி, எண்ணெய் முதலியவைகளாய், எவ்வாறு அவை கள் ஒன்றுகூடி விளக்கினிடம் ஜோதியை உண்டாக் குகின்றனவோ, அவ்வாறே ஒருமைப்பட்டு அரசனி டம் புகழென்னும் ஜோதி புனைய உபாயம் செய்தனர். எவ்வாறு இந்நான்கு பொருள்களுள் ஏதேனும் ஒன்று இல்லையாகிலும் வெளிச்சம் உண்டாகாதோ, அவ்வாறே அந்நான்கு ஜாதியாரிலும் ஒருவரில்லையா கிலும் அரசனுக்குப் புகழேற்படாது. சூத்திரர் என் னும் நான்காம் ஜாதியார், எள்ளானது எவ்வாறு செக்கிலிருந்து உழன்றுவருகிறதோ, அவ்வாறே உல குக்கு உழைத்துவந்தனர். திரியானது எவ்வாறு எண்ணெயில் தோய்ந்துள்ளதோ, அதைப்போலவே வைசியரும் சூத்திரருடன் ஒத்து வாழ்ந்து வந்த னர். அதன்றியும் அவர்கள் திரிந்துதிரிந்து, அலைந்து அலைந்து, திரைகடலோடி, திரவியந்தேடி நாளுக்கு நாள் அரசனுடைய செல்வத்தையதிகரித்துக்கொண் டே வந்தனர். அரசனும் விளக்கின் ஜோதியை ஒத் தான். அவனே தீச்சுடர் எவ்வாறு தொட்டால் சுட் டுவிடுமோ அவ்வாறே பகைஞர்களையும், நீதிதவறு

வோரையும் ஒறுத்துத் தன் நீதியென்ற செங்கோலை ஜோதியாய்நாட்டிப் புகழென்னுமொளியைப் பரவச் செய்து வந்தான். வேதியரோ, சாற்றுனசெவ்வாறு மிதாமிதமின்றி சுடருக்கேற்ற அளவு இருந்து அச் சுடரைப் பாதுகாக்கின்றதோ, அவ்வாறே அரச நீதியைத்தங்கள் சத்துவகுணத்தால் காத்துவந்தனர். பிருதிவிராஜன் செங்கோல் பூமண்டலமுழுதும் புகழ் கொண்டு பொலிந்தது. பூமகளும் தனதிருக்கையாகிய தாமரை மலரை நீத்துத் தான் தங்குவதற்குத்தக்க இடம் இதுவே என ஆஜ்மீர்நகரில் குடியேறினள். அதிகம் சொல்லுவானேன்? இவனது ஆட்சியில்அவர வர்கள் தத்தம் கடன்களைக் குறைவறச் செய்து ஒரு ஜாதியைவிட ஒரு ஜாதி மேல் என்றஎண்ண மின்றி ஒத்து வாழ்ந்து வந்ததனுல் மாதம் மும்மாரி பொ ழிந்தன.

ஒரு நாள் சூரியன் தினசரிவந்து உலகதருமத் தைப்பார்வையிடும் கடமை முடியவே மேல் கடலா கிய தன் இருப்பிடம் ஏகினுன். ஆகாயம் களங்கமற்றி ருந்தது. அன்றைத்தினம் பௌர்ணிமியாதலால் இராக்காவலனுகியசந்திரன் விரைவிலேயேபுறப்பட்டு விட்டான். கற்புடைய ஸ்திரீபோன்ற கமலங்களெல் லாம் கதிரவன் மறைந்தவுடனேயே, களங்கமுள் ளோன் வந்து விடுவான் எனக் குவிந்துகொண்டன. விலைமாதர்கள் வெள்ளுடையணிந்து தங்கள் ஆசை

நாயகர் இரவில் எப்பொழுது வருவாரோ வெனக் காத்திருப்பது போன்று அல்லிமலர்கள் இரவில் தோன்றும் நிறைமதிவருஞ்சமயம் குறித்துத்தாமும் வெண்ணிறமுடையனவாய் முகமலர்ந்தன. கோட்டைக்கு வெளியில் நிசப்தமாயிருந்தது. காவலாட்கள் கோட்டைவாயில்களை வெகுபத்திரமாய்க்காத்து வந்தனர். அச்சமயத்து தென்வாயிலை நோக்கி ஐந்து வீரர்கள் படைக்கலமணிந்து புரவிமீதேறி வெகுவேகமாய்க் காற்றினும்கடுகி வந்துகொண்டு இருந்தனர். குதிரைச்சத்தம் கேட்டவுடனே காவலாளிகள் சற்று மயங்கிப் பின் தங்களாயுதங்களுடன் குதிரைவீரரை எதிர்க்கத் தயாராயினர்; ஆனால் அக்குதிரைவீரர்கள் சங்கநாதஞ் செய்ய காவலாளிகள் பகைஞரிலரென உணர்ந்து சாதாரணமாய் நின்று அவர்கள் வருகையை எதிர்பார்த்திருந்தனர். குதிரைகளும் கிட்டிவிட்டன. முதற்குதிரையில் வருவோன் சமாதான சமிக்ஞை செய்தான். உடனே அவர்களைக் காவலாளர்கள் யாரெனக் கேட்க, அவர்கள் தாங்கள் டில்லி அரசனாகிய அநங்கபாலரனுப்பிய வீரர்களெனவும் உடனே பிருதிவிராஜனைக்காண வேண்டுமெனவுங் கூறினர். காவலர்கள் அவர்கள் கருத்துக்கிசைந்து உட்செல்ல விட்டனர். உடனே வீரர்கள் அதிவேகமாய்க் கீழ்வீதிவழியாய்ச் சென்று கொஞ்சநேரத்தில் மறைந்தனர். பிற்பாடு அவர்கள்வடவீதி வழியாய்ப்

போய்க்கிழவாசல் வந்துசேர அவணிருந்த சேவகரி டமும் தாம் வந்த செய்தியை உரைத்து இரண்டாம் மதிலையும் கடந்தனர். பிற்பாடு ராஜவீதிவழியாக அரண்மனை அடைந்தனர். இதற்குள் ஊர்ச்சனங்க ளுக்கு யாரோ வீரர்கள் தம்மரசனிடம் வந்திருக் கின்றனர் என்பது தெரிந்தது. அதனால் அவர்கள் வேற்றரசன் எவனேனும் படையெடுக்கத் தம் வேந் தனுக்குத் தூது அனுப்பினனே எனத் துக்கத்துள் ஆழ்ந்தனர்.

குதிரை வீரர்கள் அரண்மனை வந்து சேர்ந்து வாயிற்காவலாளரிடம் அவசரமாய் டில்லி அரசனாகிய அநங்கபாலர் தங்களை அனுப்பியிருப்பதாகக் கூறித் தாங்கள் பிருதிவி அரசனை உடனே காண வேண்டு மாதலின் அவனிடம் சென்று செய்தியைத் தெரி விக்குமாறு கூறினர். உடனே காவலாளர் ஓடோடி யும் சென்று அரசனிடம் செய்தியை உரைக்க அன் னான் உடனே யவர்கள் உள்ளேவர உத்தரவளித் தான். யுத்தவீரரும் அரசனிடம் சேர்ந்தனர். அர சன் தன் பாட்டனான அநங்கபாலரிடமிருந்து அப் போது ஆள்வர யாதுகாரணமென்பதைப் பற்றி யோசித்துக்கொண்டிருந்தான். ஆகவே அவ்வீரர்கள் அவன்முன் தோன்றியவுடன் அவர்களை நோக்கி அவர்கள் அவ்விடம் வந்த செய்தியை விஸ்தாரமாய் உரைக்கும்படி கட்டளையிட்டான். அவர்கள், "அரசே!

நம் அநங்கபாலர் நேற்றையதினம் மாலை நேரத்தில் உலாவலாமென உத்யானவனம் சென்றிருந்தார். அத்தருணத்து, ஏதோ மயக்கமடைந்து ஒன்றும் தோன்றாதவராய்த் தங்களைத் தக்ஷணமே அழைத்து வரும்படி எங்களை ஏவினார். இதுவே நாங்கள் அறிவோம்'' என்றனர்.

இதைக்கேட்ட மன்னன் இவ்வாறு திடீரெனத் தன்னையழைத்த காரணம் யாதாயிருக்கலாம் என்ற எண்ணத்துளாழ்பவனானான். பிறகு அவ்வீரர்களிடம் தான் அவ்வாறே வருகிறேனெனச் சொன்னதாக அநங்கபாலருக்கறிவிக்கும்படி கூறியனுப்பினான்.

ஆஜ்மீர்நகர் முழுதும் இதற்குள் டில்லிமன்னர் தங்கள் அரசனை அழைத்துவரத்தூது அனுப்பியிருக்கிறார் என்ற செய்தி பரவியது. எல்லோரும் அன்றிரவு முழுவதும் அரசரை அநங்கபாலர் எதற்கழைக்கலாமென்பதைப்பற்றியே எண்ணமிட்டனர். சிலர் "அநங்கபாலர் விருத்தாப்பியராய்விட்டபடியால் தம்முடைய நாட்டை நம்மரசருக்குக் கொடுக்கக் கூப்பிட்டிருக்கலாம்'' என்றனர். வேறுசிலர், "அவ்வாறிராது அப்படியாயின் நம்மரசனின் ஒன்று விட்ட சகோதரராகிய ஜயசந்தர் இல்லையோ? அவருக்குக் கொடுக்கக்கூடாதோ?'' என்றனர். மற்றுஞ்சிலர், "ஒருவேளை அவருக்கு ஏதாகிலும் உடம்பு அசௌகரியமாய் இருக்கலாம். ஆயிரமானாலும்பேரனல்லவா?

பார்ப்பதற்கழைத்திருக்கலாம்'' என்றனர். இன்னுஞ் சிலர், "ஜெயசந்தரிருக்கையில் நம்மரசருக் கெங்கே பட்டங் கிடைக்கப் போகிறது?'' என்றனர். இவ்வாறு ஊர்முழுவதும் பேச்சாயிருக்க அரசனும் ஆஜ்மீரைவிட்டு டில்லிக்குப் பிரயாணமானான்.

மறுநாட்காலை பொழுதுவிடிந்ததும் தன்சேனை சிலவற்றுடனே டில்லிநகர் வந்து சேர்ந்தான். அவ்விடத்தில் அநங்கபாலர்கோட்டைவாயிலிலேயே அரசனை எதிர்கொண்டழைக்கக் காத்திருந்தனர். பிருதிவி கோட்டைவாயிலை அணுகியவுடன் மங்களவாத்தியங்களெல்லா முழங்கின. சங்கநாதம் காதைப்பிளந்தது. அநங்கபாலரும் பிருதிவியை அரண்மனைக்கு அழைத்துச் சென்றனர். பிறகு அவர்கள் அந்தரங்க அறைக்குச்சென்று ஆங்கு மந்திரி பிரதானிகளுடன் ஓர் மகாசபை கூட்டினர். அப்பொழுது அநங்கபாலர் முதலிலெழுந்து, "மந்திரி பிரதானிகளே! நான் நம்பிருதிவி மன்னனையழைத்தது யாது காரணமெனில், இரண்டு நாட்களுக்குமுன் நான் ஒரு கனவு கண்டேன். அதாவது: பிருதிவிராஜன் தன் பெயருக்கேற்றாற்போல் தன் நாட்டைப்புரந்து வருகிறானெனவும், அவனுடைய நாட்டில் தான் தருமதேவதையவதாரமாகி இருக்கிறாளெனவும், ஆகையால் நான் விருத்தாப்பியமடைந்துவிட்டபடியால் என்னுடைய வாழ்நாளின் கடைசிச்செயலாக இவ்விராஜ்யாதிகா

ரத்தை அவன் வசம் ஒப்புவித்தலே நலமெனவும் ஓர் அசரீரி கூறியது. இதுவரை எனக்குச்சந்ததியில்லையே என்று ஏக்கமுற்றிருந்தேன். என் நாட்டிற்குரியவராக இருவரிருப்பதால் அவர்களில் யாருக்கு நாட்டைக் கொடுப்பதென்ற பெருந்துக்கமும் என்னைப் பிடித்து வந்தது. இப்போது அத்துக்கம் பறந்து போயிற்று. ஆதலால் அவையோரே! என் நாட்டிற்கு இப் பிருதிவி ராஜனையே அரசனாக்க நினைத்துள்ளேன்" எனக்கூறி பிருதிவியைநோக்கி, "அப்பா, பிருதிவி! உனக்கு இதிற் சம்மதந்தானே?" என்று கேட்க, பிருதிவிராஜன் மௌனமாயிருந்தான். உடனே அந்நாட்டின் மந்திரியாகிய சுந்தரசிங் என்பவர் எழுந்து, "அரசே! இவ்விஷயத்தில் பிருதிவி அரசர் மௌனத்தால் தம் சம்மதத்தைத் தெரிவித்தனர். இதில் எங்களுக்கெல்லாம் பூர்ணசம்மதியே தாங்கள் இவ்வாறு இத்தகைய குணசீலரைப் பொறுக்கியெடுத்தது எங்களுடைய அதிர்ஷ்டமே" என்றார். ஆங்கு குழுமியுள்ள அந்தணரும் பிறரும் "ஜெயவிஜயீபவ," "அரசன் நீடூழி வாழ்க," எனவாழ்த்தினர். பிறகு புரோகிதரையழைத்து, பட்டாபிஷேகத்திற்கு நல்ல லக்னம் பார்த்தனர். வேதியர் விதிப்படி அன்றைக்கு ஐந்தாம் நாள் திங்கட்கிழமை காலை இரண்டு நாழிகைக்கு சிம்மலக்னத்தில் முடி சூட்டலாம் என முடிவுக்கு வந்தனர்.

அரசன் தன் மந்திரிமாரையழைத்து நகரலங்காரஞ்செய்யும்படி ஆக்ஞாபித்தான். அமைச்சர்களும் பறையறைவிப்போர் மூலம் பட்டணத்தை யலங்கரிக்குமாறு ஊர்ச்சனங்களுக்கு அறிவித்தனர். இம்மங்களச் செய்தி ஆஜ்மீர் நகரிலும் பரவ அந்நகரத்தோரடைந்த சந்தோஷத்திற்கு அளவேயில்லை. அவர்களும் தங்கள் பட்டணத்தை அலங்கரித்தனர். அன்றையிலிருந்தே அளவற்ற ஜனங்கள் டில்லி நோக்கிப் பிரயாணப்பட்டுக் கொண்டே இருந்தனர்.

டில்லியில் ஒவ்வொரு வீதியிலும்மகரதோரணங்கள்கட்டப்பட்டன. முச்சந்திகளிலெல்லாம் கமான் வளைக்கப்பெற்று அதன்கண் நம் "பிருதிவி மன்னர் நீடூழிவாழ்க" எனவும் "அரசர்க்கு நல்வரவளிக்கின்றோம்" எனவும்பலவித உபசாரவாழ்த்துகள் பொன்னென முத்துக்களில் பொறிக்கப்பட்டிருந்தன. வாயில்களிலெல்லாம் காவிதீட்டினர். தங்கள் தங்கள் வீட்டுமாடத்திலெல்லாம் அழகிய பளிங்கு விளக்குகள் தொங்கவிட்டுத் தங்களரசாங்கக் கொடிகளை அழகாய்க் கட்டினர். கோட்டையின் மதில்களிலெல்லாம் லங்கர் ஏற்றப்பட்டது. அரண்மனை வாசலில் முத்துக்களாலும் நவரத்தினங்களாலும் தோரணங்கள் கட்டப்பட்டன. கொலுமண்டபத்தில் நக்ஷத்திரக் கூட்டம் போல பற்பல விளக்குகள் விதம்விதமாய்த் தொங்கவிடப்பட்டன. அம்மண்டபமுழுதும் கற்க

ளால் அலங்கரிக்கப்பெற்று, சூரியகிரணங்கள் படும் போது மிகவும் ஒளி வீசிக் கண்ணைப்பறிப்பதுபோலி ருந்தது. ஒருபுறம் இயற்கைவனப்புப்படங்களும், இன்னொரு சார்பில் ரஜபுத்திரர்களின் வீரச்செயல்க ளைக்குறிக்கும் படங்களும், மற்றோர்பக்கத்தில் தேவ தைகளின் படங்களும் தொங்கவிடப்பட்டன. சிம் மாசனத்திற்குமேல் பொன்னினலேயே மேவப்பட்டு ரத்னங்கள் இழைத்த முகப்புகள் கொண்டதாய் மிக வும்அழகிய குடைவடிவமாய் ஓர்பந்தலிடப்பட்டது. இன்னும் அம்மண்டபத்துள் ஒவ்வொருமூலையிலும் பெரிய பொற்பாவைகள் தீபமேந்தி நின்றன. ஒரு புறம் சிற்றரசரெல்லாரும் உட்கார ஆசனங்கள் அமைக்கப்பட்டன. இன்னொருபக்கம் அரசனுடைய பந்துக்கள் வீற்றிருக்க இடம்விடப்பட்டிருந்தது. வேறோர் சார்பில் வேதியருக்கென இடம்போடப் பட்டிருந்தது. மற்றோர் புறத்து மாதர்கள் இருப்ப தற்குத் தனியிடம் அமைக்கப்பட்டிருந்தது. இஃதிவ் வாறுக அரசன் தன் மறுபேரனுகிய கன்னேசி அரச னுக்கும் வரவுப்பத்திரிகையனுப்ப அன்னவனும் தன்நாட்டார்க்கு இம்மங்களச் செய்தியையுரைத்துப் புறப்பட்டான். ஆகவே முத்தேச ஜனங்களும் ஒரு தேசத்துள் வந்து சேர்ந்ததானது மும்மூர்த்திகளும் தம் பரிவாரங்களுடன் ஒருங்குகூடியது போலிருந் தது. டிஸ்லிநகரெங்கும் எள்ளுப்போட இடமின்றிப்

பிரளயகாலத்துத் திருமாலின்வயிறு எவ்வாறு பூர்ண மாயிருக்குமோ, அவ்வாறே நிரம்பியிருந்தது. பட்டா பிஷேகதினமும் கிட்டிவிட்டது. ஒவ்வொரு அரச னுக்கும் தனித்தனியே விடுதியமைக்கப்பட்டது. அந் நகரில் எங்கேபார்த்தாலும் "நாளை பட்டாபிஷேகம்" "நாளை முடிசூட்டல்" என்ற முழக்கமே குடிகொண் டிருந்தது.

பட்டாபிஷேகத்திற்கு முதல் நாள் சாயந்திரம் வழக்கம்போல பிருதிவி மன்னனுடன் எல்லோரும் தங்கள் குலதேவதையாகிய பார்வதி தேவியின் கோவி லுக்குப் புறப்பட்டனர். அக்காலத்து ஜெயசந்தன் மகளாகிய சம்யுக்தையென்பாளும் மாதர்களுடன் புறப்பட்டனள். அப்பவனியில் பிருதிவிராஜன் அங்கு தோன்றிய ஆடவர்களுக்கெல்லாம் சிம்மம்போல விளங்கினன். சம்யுக்தை ஆங்கு கூடிய மாதர்களுக் கெல்லாம் திலகம்போலத்திகழ்ந்தனள். எல்லோரும் கோவில் வந்து சேர்ந்தனர். பார்வதிதேவியின் சன் னதியையடைந்து, அத்தேவிக்கு நடந்தேறிய அபி ஷேக ஆராதனைகளைக் கண்ணுற்று ஆநந்தமடைந்த னர். சம்யுக்தைமாத்திரம் ஏதோகவலையுற்றாள். "என் கணவனாக இச்சுந்தரபுருஷன் ஆகமாட்டானா? அதற் குநீ கருணை புரியாயா? எனத்தேவியை நோக்கித் துதித்தாள். பிருதிவியும் ஓர்முறை மாதர்கூட்டத் தைக் கடைக்கண்ணால் நோக்க அங்கே பளிச்சென்று

மின்னிய சம்யுக்தையின் முகம் அவன் கண்ணைக் கவர்ந்தது. உடனே இருவருடலிலும் புளகம் உண்டாயிற்று. எனினும் அவர்கள் அதனை வெளிக்காட்டாதவராய்த் தேவியை மனமாரத் தோத்தரித்தனர். அபிஷேகமெல்லாம் நன்றாய் நடந்தேறியது. பிறகு முறைப்படி அரசனுக்கு ஆரஞ்சூட்டினர். மறுபடியும் அரண்மனைநோக்கிப் பவனி புறப்படலாயிற்று. மாளிகை வந்ததும் யாவரும் அளவுகடந்த ஆனந்தமெய்தினர். உடனே மன்னர்களெல்லாம் மாளிகைக்குட்செல்ல, பலவித வாத்தியங்கள்முழங்கின. அதன் பிற்பாடு வேண்டிய வைதீக காரியங்களெல்லாம் முறையே நடைபெற போசனம் முடிந்தது. அன்று இரவு சந்திரிகையோ மிகவும் ரம்யமாயிருந்தது. எல்லோரும் நித்திரைக்குச் சென்றனர். சந்தோஷமே மனதில் நிறைந்திருந்தபடியால் ஜனங்களெல்லாம் நன்றாய் நித்திரை செய்தனர். ஆகவே அன்றைய இரவு நிசப்தமாயிருந்தது.

ஆனால் இருவர் மிகவும் வருந்திக்கொண்டிருந்தனர். அவர்களே நம் சம்யுக்தையும், பிருதிவி மன்னரும் ஆவர்.

சம்யுக்தை, "ஏது எனக்கு இன்றையதினம் தூக்கமேவரவில்லையே! அம்மகானுபாவனுடையதிருமேனியே என்திருஷ்டியில் இருக்கிறதே! ஆஹா! இதுதான் காதலோ? நானும் எவ்வளவோ ஆடவ

ரைப் பார்த்திருக்கிறேன். அவர்களிடமெல்லாம் எனக்கு இவ்விதமாய்த் தோன்றவில்லையே. இவரைக் கண்டவுடன் ஏதோ பித்துப்பிடித்தவள்போலன்றோ ஆகிவிட்டேன். ஆஹா! மன்மதனென்று ஒருவன் உண்டு; அவன்மகா அழகுவாய்ந்தவனென்றுகேள்வியுற்றிருக்கிறேன்; அதன்றியும்அவனுக்கு உருவில்லை; ஆனால் பிறருடைய காதலைத்தூண்டும் தன்மையுடையானவன். இவரோ அம்மன்மதனைவிட மேன்மைமிகுந்த வனப்புடையவராயிருக்கிறார். உருவமிருப்பதனால் இவர் அவனல்லர். என் அகத்தையும் நன்ருய்க் கொள்ளைகொண்டார். ஆ! என் செய்வேன்! இம்மதியின் வேதனை பொறுக்கமுடியவில்லையே! மதியென்னும் பெயர் கொண்டிருக்கிருயே, ஏ சந்திரா! நீயோ மதியுடையவன்? நான் முன்னமே வருந்திக்கொண்டிருக்க 'வெந்த புண்ணிலே வேலிடுவது போல்' எங்கிருந்தடா என்னை வருத்தவந்தாய்? மறவியே!'' என்று புலம்பிக்கொண்டிருந்தாள். பிருதிவிராஜனே தன்னறையில் சம்யுக்தையை நினைந்து நைந்துகொண்டிருந்தான். நெடுநேரமானபின் துயிலென்னும் நண்பன் இருவர்களையும் ஆனந்தக்கடலுள் ஆழ்த்த இருவரும் மெய்மறந்து நித்திரை செய்வாராயினர்.

மறுநாட் பொழுது புலர்ந்தது. ஜீவராசிகளெல்லாம் தத்தம் கடமையை இயற்றக்கண் விழித்தன,

இருளின்திறல் அருக்கன் உதிக்கவும் இருப்பிடமின்றிப் பறந்தோடியது. அருக்கனோ தன் பகைவனை இருளினைவெருட்டிவிட்டு ஆங்குபுறப்பட்டகாகங்களையெல்லாம் செங்கிரணங்கொண்டு இருளென நினைத்து வருத்த, அவைகள் தாங்கள் இருளல்லவென்பதைக் குறிக்க "கா! கா!" வென்று கத்திக்கொண்டுபறக்க ஆரம்பித்தன. ஊர் ஜனங்கள் யாவரும் தத்தம் காலைக் கடன்களை முடித்து, அரண்மனை ஆஸ்தான மண்டபம் வந்து கூடினர். எல்லாச் சிற்றரசர்களும் அவ்விடத்துத் தங்கள் தங்களுடைய ஆதனத்தமர்ந்தனர். பிருதிவி மன்னனுக்கு மங்களஸ்நானஞ் செய்வித்து, வேதியரைக்கொண்டு ஆகவேண்டுவன வெல்லாமுடித்து அவனை ராஜசபைக்கண் அழைத்துவந்தனர். இளவரசனை பிருதிவி மன்னன் அவைக்கண் புகுந்தவுடன் சிற்றரசரெல்லாம் எழுந்து மரியாதை செய்தனர். பிற்பாடு சிம்மலக்னத்தில் பிராமணோத்தமர்கள் முறையே சிம்மாதனத்திருத்தி அவனுக்கு முடி சூட்டினர். வாத்யகோஷங்களெல்லாம் முழங்கின. எல்லோரும் "ஜெய விஜயீபவ" எனவும், "அரசன் நீடூழிவாழ்க" எனவும், "நீதிதழைக்க" எனவும் வாழ்த்தினர். தேவர்கள் பூமழை பொழிந்தனர். அநங்கபாலர் அகமும் புறமும் குளிர்ந்தார். அப்பொழுது அச்சபையானது 'தேவலோகஇந்திரசபை' யெனவே பொலிந்தது. ஆங்கிருந்தோர் அநுபவித்த

ஆனந்தத்தை நேரில் அனுபவித்தாலன்றி எடுத்து ரைப்பது அசாத்யமான காரியம். ஊர்வசி, ரம்பை, திலோத்தமைபோன்ற மாதர்கள் நாட்டிய மாடினர். பிறகு அரண்மனையிலுள்ள ஒவ்வொரு அரங்கிலும் விதம்விதமான காட்சிக ளெல்லாம் நடந்தேறின. சங்கீதம், ஜாலம், பரதநடனம், நாடகம் முதலிய வற்றுள் ஒவ்வொன்றும் ஒவ்வோரிடத்தில் நடந்து வந்தது. அதன் பின்னர் அங்கு அரண்மனை மல்லர்கள் மல் யுத்தஞ் செய்தனர். எல்லோருக்கும் அவரவர்க் கேற்றாற்போலப் பரிசளிக்கப்பட்டது. பிராமணர் களுக்குச் சம்பிரமமாய் போசனம்நடந்தது. ஆகவே பிருதிவிராஜன் பட்டாபிஷேகத்தால் யாவரும் உள் ளும், புறமும் சந்தோஷித்தனர். ஆனால் பிருதிவிராஜ னுடைய ஒன்று விட்ட சகோதரனான ஜெயசந்தன் மனதில் மட்டும் பொறாமை முளைதோன்றலாயிற்று. அவன் "எனக்குக் கொடாமல் இந்நாட்டை எனக் கிளையவனாகிய பிருதிவிக்குக் கொடுத்தாரே என் பாட்டனார். நானென்ன அவ்வளவு ஆண்மையற்றவ னா? இல்லை, அவருக்குத்தான் ஏதாகிலும் மனம் நோகும்படி நடந்து கொண்டேனா? ஒன்றுமில்லையே. அப்படி யிருக்க அவனுக்கு எப்படிக் கொடுத்தார்," என்று அடிக்கடி நினைக்க நினைக்க அவனுடைய பொறாமை வேரூன்றிக்கொண்டே வந்தது. அதனால் எவ்வாற்றானும் பிருதிவியை வருத்தவேண்டு மென்ற நோக்கத்தினைக் கொள்ளலானான்.

பட்டாபிஷேகமான இரண்டு மூன்று தினங்களுக்கெல்லாம் எல்லா அரசர்களும் தத்தம் நாடு போக விடைபெற்றுச் சென்றனர். சம்யுக்தையின் தந்தை கன்னோசிக்குப் புறப்பட்டபொழுது சம்யுக்தை பிருதிவியை விட்டுப்பிரிய மனஞ்சகியாதவளாயினும், மன ஏக்கத்துடனேயே போய்ச்சேர்ந்தாள். அன்று முதல் பிருதிவியும் ஆஜ்மீர், டில்லி இரண்டினையும் தன் இரண்டு கண்களைப்போல் பாவித்து ஆண்டுவந்தான்.

இரண்டாம் அத்தியாயம்.

பிருதிவியின் காதல்.

பட்டாபிஷேகமாகி மூன்று வருஷங்களாயின.

அநங்கபாலரும் நாளுக்கு நாள் பலஹீன மடைந்து கொண்டே வந்தார். கொஞ்சநாளில் அவர் உயிர் துறப்பாரெனத் தோன்றியது. அவர் இறக்கும் போது பிருதிவியை யழைத்து, "அப்பா பிருதிவி! எனக்கோ காலங்கிட்டி விட்டது. உனக்கொன்றுஞ் சொல்லவேண்டாம். என்றாலும் முறைப்படி சொல்லுகிறேன். யாருடனும் சண்டை சச்சரவுசெய்யாதே. உலகத்தில் இன்சொல் என்னும் ஓர் காந்தமானது எவ்வஸ்துவையும் வசீகரஞ் செய்துவிடும். ஆதலால்

நீ எப்பொழுதும் யாருடன் பேசினாலும் இனிமையாகப் பேசு. இராஜ்யத்தைப் பத்திரமாய்ப் பார்த்துக்கொள்'' என்று சொல்லி இவ்வுலக வாழ்வை நீத்தனர். பிற்பாடு அவருக்குச்செய்யவேண்டிய கிரியைகளெல்லாம் குறைவற நடந்தேறின.

இஃதிவ்வாறாக, பிருதிவிராஜன் மனம் ஏதோ சஞ்சலப்பட்டுக்கொண்டேயிருந்தது. ஏதோ ஒரு அருமையான பொருளை யிழந்தவன்போல் அவன் ஏக்கங் கொண்டிருந்தான். சரியானவேளையில் உண்கிறதில்லை, உறக்கமும் கிடையாது. தான் அரசனென்பதையே மறந்து, ஏதோ பித்துப்பிடித்தவன்போலானான். அடிக்கடி எதையோ நினைத்துத் திடீரென்று பெருமூச்சுவிடுவான். மறுபடியும் தேறியவன்போல் தோற்றுவான். இவ்வாறு நாளுக்குநாள் அவன் மழைகாணாப்பயிர்போல் வாட்டமுற்று வந்தான்.

ஒருநாள் மாலை இவன் உத்தியான வனத்தில் உலாவச் சென்றிருந்தான். அப்பொழுது இவனுடைய பிரிய நண்பனாகிய ஜெயசிங் என்பவனும் கூடச் சென்றிருந்தான். அவ்விடத்துச் சந்தோஷமற்ற முகத்துடன் யாதொன்றும்பேசாது ஏதோ ஓர் ஆழ்ந்தயோசனையிலிருப்பவன்போல் காணப்பட்ட பிருதிவியைநோக்கி ஜெயசிங் "ஒருநாளுமின்றி நீ இவ்வாறு துயருறக்காரணமென்னவோ!'' எனக் கேட்டான்.

அத்தருணத்து மந்த மாருதம், தன் இன்னுயிர்க் காதலிகளாகிய புஷ்பங்களைப்போய் முத்தமிட்டுத் தழுவுவதுபோல மிக ஆனந்தமாய் வீசிக்கொண்டிருந்தது. மயில்களெல்லாம் ஜதைஜதையாய்த் தத்தம் தோகைகளை விரித்தாடிக்கொண்டிருந்தன. மரக்கிளைகளின் மீது குயிலினங்கள் ஜோடி ஜோடியாய்ப் பாடிக்கொண்டிருந்தன. வண்டுகளெல்லாம் புஷ்பம் புஷ்பமாக மதுவுண்டு, கர்வம் கொண்டு மதிமயங்கி ரீங்காரஞ்செய்தவண்ணமாயிருந்தன. அவ்விடமமைக்கப்பட்டுள்ள தடாகத்தின் நீரானது தூயோர்களின் மனம்போலச் சஞ்சலமற்றுத்தெளிவாயிருந்தது. அதனுள்தோன்றும் தாமரை மலர்கள் தங்கள் நாயகன் மறைய, இனி மதியுடன் அல்லிமணக்குந் தருணங் கிட்டிவிட்டது எனவுணர்ந்து அதனைக்கண்ணுறுதல் ஆகாதெனத் தங்களிதழ்களை மூடிக்கொண்டன. பரிதியும் அஸ்தமனகிரியையடைந்தான். சந்திரனும் தன்குளிர்ச்சியான கிரணங்களைப்பரப்பிக்கொண்டு, கண்டோர் கண்ணையும், மனத்தையும் கவரும் படியான அழகியதோற்றத்தோடு புறப்பட்டு வந்து கொண்டிருந்தான்.

தன் நேசன் கேட்டகேள்விக்குப் பதிலுரையாது பிருதிவிராஜன்,

பொன்னனைய மாமேனி புயலனைய பைங்கூந்தல்
மின்னனைய மிளிரிடைசேல் மீனனைய மருள்விழிகள்
உன்னதஞ்சேர் மதிவதனம் உயரன்ன நடையிவற்ருல்
கன்னியமு தின்றெனது கன்னெஞ்சைக் கரைத்ததுவே.

என்றுபாட ஆரம்பித்தான். இதைப்பாடி முடித்த வுடன் ஜெயசிங், "மன்னவரே! என்ன ஒருநாளுமில்லாது இவ்வாறு புலம்புகின்றீர்? அரசே! நுந்தம் அகத்தினை இங்ஙனம், கவாவுகொண்ட காரிகை யாரோ? விரைவிற் கூறும்" என்ருன். காவலன் இதனையுங் கவனித்திலனாய் மீண்டும் பாடத்தொடங்கினுன்:-

பாவையே யுன்வதனம் பார்ப்பதுநா னென்னாளோ?
சோவை வாய்ச்சொற் செவியிற்கொண்டிடுவ தென்னாளோ
பூவனைய கரமென்கை பொருந்துவது மென்னாளோ?
ஆவியினை யான்மீண் டடைந்திடுவ தென்னாளோ.?

காரிகையே உன்னைநான் கண்டநாள் முதலாக
ஓர்விதமா யிருக்கும்உளம் உன்னிடே னெச்சுகமும்
பாரினிலே யுள்ள பதுமினிப் பெண் களின்முதலாம்
நாரியே யுன்னருளை நாடிமிக வேண்டுவனே.

தன்னுடைய கேள்விகளுக்கு விடைபகராது தான் ஆவலுற்ற தையலாள் மீதே ஞாபகமாயிருக்கிற நண்பனைநோக்கி ஜெயசிங், "அன்பனே! என்னிடமதை நவில வொண்ணுதோ?" என்ருன். உடனே அரசன், "நேசா! நான் என்னென்று உரைப்பேன்!!

கற்கண்டே என்பேனோ கனிச்சுவையே என்பேனோ
பிற்கொண்டு வேறெதையும் பேசிடவுமறியேனே;
விற்கொண்ட பிறைநுதலும் வேல்கொண்ட விழியிணையும்
நற்கொண்டற் குழலுமிடை நலங்கொண்ட நங்கையையே.

என்று பாடிமுடித்தான். உடனே ஜெயசிங், "பிரிய நேய! அஃதிருக்கட்டும். அவ்வித அழகுவாய்ந்த மடந்தையாரோ? அதனைமுதலில்கூறுவாய்" என்றான். உடனே பிருதிவிராஜன் தன் நண்பனிடம், "அன்ப! இப்பொழுது அதனைப்பற்றிப் பேசிப்பயனென்ன? எட்டாப் பழத்திற்குக் கொட்டாவிவிடலாமா?" என்றான். ஜெயசிங் "நேச! அவ்வளவு மேன்மை மிக்க அம் மங்கை நல்லாள் என்ன மண்மடந்தையோ, அல்லது விண் மடந்தையோ? அவ்வளவு அருமையானவள்யார்?" என்றான். பிருதிவி, "அன்னவள் யாரெனவா கேட்கிறாய்? நமது ஜெயசந்தனிருக்கிறானல்லவோ, அவனுடைய இன்னுயிர்ப்புதல்வி சம்யுக்தையேயாகும்" என்றான். உடனே ஜெயசிங், "சம்யுக்தா தேவியா! சரி. அதற்கென்ன இப்பொழுது? மனத்தை வெளியிட்டால் மணமுடிகிறது" என்றான். இதற்குள் அரசன் மிகவும் வருத்தமுற்றவனாய், "ஆ! மன்மதா! நீ ஏனோ இவ்வளவு இரக்கமின்றி இருக்கின்றாய்! சிவபெருமானால் நீ கர்வபங்கப்பட்டும் இன்னும் இவ்விதம் இன்னலளிக்கின்றனையே அநங்கா! நீ அங்கமில்லாதிருக்கையிலேயே இவ்வளவு கொடுமை யிழைக்கின்றாய்; உருவைப் பெறுவாயெனில் என்னதான் செய்யாயோ? ஆகா!

கெங்கைமுடி தரித்தோனைக் கெடுத்திடவே சென்றமதன்
அங்கமிழந் தானென் றறைகுவது மெய்தானோ?
அங்கமிழந் தானென் றறைகுவது மெய்யானால்
இங்கிவனுமென்னை யெதிர்த்திடலு மென்னேயோ?

ஆகா! என்செய்வேன்!'' என்று புலம்பிக்கொண்டே கீழே விழுந்துவிட்டான். உடனே ஜெயசிங் அவனை யணைத்து மூர்ச்சை தெளிவித்தான். அரசன் விழித் தெழுந்ததும் அவன் பிராணநேசன், "நண்ப! அப்படி யல்ல அம்மடவரலை யான் மணக்காவிடில் மரணமடை வது திண்ணம்'' என்றான். அதற்கு ஜெயசிங், "அப் படியா? இதற்காக மரணமடைவானேன்? இதோ ஒரு உபாய முரைக்கின்றேன் கேள். நான் இப்பொ ழுது சம்யுக்தையின் அரண்மனை சென்று, அவளு டைய தாதியை யழைத்து வருகிறேன். நீ அவளிடம் உன்னுடைய உருவப்படத்தைக் கொடுத்தனுப்பி சம்யுக்தையின் காதலை அதிகப்படுத்தச்சொல்லு. பிற் பாடு தெய்வ கடாக்ஷம்போல் நடக்கிறது'' என்றான். உடனே பிருதிவிராஜன் உள்ளமகிழ்ந்து, "நண்ப! நண்ப!! நன்றாய்ச் சொன்னாய்! உத்தம நண்பனென் றால் உனக்கேதகும்'' என்றான். பிற்பாடு இருவரும் கொஞ்சநேரம் உலாவி விட்டு, அரண்மனைபோய்ச் சேர்ந்தனர். ஜெயசிங் தான்கூறியவாறே சம்யுக்தையி னிடத்து வேலை செய்யும் ஓர் தாதியை அழைத்து வந்து, அவளிடம் முற்கூறியபடியே பிருதிவியின் உருவப்படத்தைக் கொடுத்தனுப்பினான்.

---*---

மூன்றும் அத்தியாயம்.

தனேஸ்வர யுத்தம்.

நாம் முன் அத்தியாயத்திற் கூறியபடி ஜெயசிங் உருவப்படத்தைக் கொடுத்தனுப்பி, இரண்டு மூன்று நாட்கள் வரையில் பிருதிவிராஜன் இன்னதென்று சொல்லக்கூடாத பெருந் துயரத்துள் ஆழ்ந்திருந்தான். நாளுக்கு நாள் அவனது துயரம் வளர்ந்து கொண்டு வந்தது. இவ்வாறிருக்க ஒருநாள் அவன் அந்தரங்க அறையில் உட்கார்ந்துகொண்டிருக்கையில் ஒரு சேவகன் அவ்விடம் வந்து, "அரசே! என்ன அநியாயம்! துருக்கர்கள் படையெடுத்து வருகின்றனராம். மேற்குப் புறமுள்ளநாட்டில் பற்பலகிராமங்களையெல்லாம் கொளுத்தி, கோவில்களை இடித்துக் கொள்ளையிடுகின்றனராம். அக் கிராமவாசிகளெல்லாம் இன்று தான் இவண் வந்து குய்யோ, முறையோ வெனக்கதறினர்" என்றான். அதைக்கேட்டதும் அரசன் திடுக்கிட்டெழுந்தான். பற்களை நறநறவென்று கடித்தான். மனத்தில் கோபம் பொங்கியெழுந்தது. முகம் எள்ளுப்போட்டால் வெடித்துவிடும் போல் சிவந்தது. மீசைபடபடவென்று துடித்தது. இவ்வித மாறுதல்களை யுடையோனாய், "ஏ சேவக! இவ்வளவு தூரமாய் விட்டதா? நீ உடனே சென்று நம்மந்திரி சுந்தரசிங்கை அழைத்துவா" என்று அவனை அனுப்

பினான். கொஞ்சநேரத்திற் கெல்லாம் மந்திரியும் வந்து சேர்ந்தான். அவனை நோக்கி மன்னவன் தன் தேசத்துச் சேனையாவும் தலைநகரிலேயே யுளதா வெனக் கேட்க, சுந்தரசிங்கும் "ஆம்" என்றுரைத் தனன். உடனே மன்னவன், அவைகளை யெல்லாம் ஒன்று கூட்டி யுத்தத்துக்குத்தயாராகும்படி உத்தர வளித்தான். இன்னும் கன்னோசி மன்னனாகிய ஜெய சந்த ராஜனுக்கும் இவ்விஷயத்தைத்தயறிவித்து அன்ன வனுடைய சைன்யங்களையும் அழைத்து வரும்படியா கக்கடிதம் எழுதவேண்டுமென்றும் கழறினான். மந்தி ரியும் அவ்வாறே செய்வதாய் ஒப்புக்கொண்டு சென் றுவிட, தனியேயிருந்த புரவலன், "ஆ! சம்யுக்தா! என் செய்வேன்! இவ்யுத்தத்தில் ஆ! ஆகாது! ஆகாது! சீ! சீ! ராஜபுத்திரனாய்ப் பிறந்த எனக்கும் இவ் வெண்ணமா? ஆ! கண்ணே! இதோ நிமிஷத்தில் அத் துருக்கனை ஜெயித்து, வெற்றிமாலை பெற்று உன்னு டைய மணமாலையையும் பெறுகிறேன்.........நல்ல வேளை! கொஞ்சகாலமாகிலும் உன்னைப்பற்றிய எண் ணம் என்னை வருத்தாதிருக்கட்டும்." என்று கூறிக் கொண்டு யுத்தத்திற்கு வேண்டிய ஆயத்தங்களையெல் லாம் செய்யப்புறப்பட்டான்.

மந்திரி சுந்தரசிங் மன்னனின் கட்டளைப்படியே சேனைகளை யெல்லாம் தயார்செய்துவிட்டுக் கன் னோசிக்கும் கடிதம் அனுப்பினான். அதன்படியே

ஜெயசந்தனும் தன்சேனையைக் கூட்டிக் கொண்டு புறப்பட்டான். தான் புறப்படுவதற்கு முன் அவன் ஒரு தூதனிடம் பிருதிவிமன்னனுக்குத் தான் அன்றைக்கு எட்டாம் நாள் தன்னுடைய சைன்யத்தை டில்லியிற் கொண்டுவந்துசேர்த்துவிடுவதாகச் செய்தி சொல்லி யனுப்பினன். அதன்படியே கன்னோசிச் சேனைகள் டில்லிவந்துசேர்ந்தன. பிற்பாடு இருசேனையுமாகச் சேர்ந்து கொண்டு, மகம்மதுகோரி தனேஸ்வரத்திற்கு அருகேலுள்ள ராஜபுரி என்றநகரம் வந்துவிட்டதாகக்கேள்வியுற்று வடக்கு நோக்கிப்புறப்பட்டன. இரண்டு மூன்று நாட்களில் அவர்கள் யமுனைநதிக்கரைவந்து சேர்ந்தனர். அவ்விடத்து ஓர் நாள் பாளையமிறங்கியிருக்கையில் இரவு பன்னிரண்டு மணியளவுக்கு ஏதோ ஒரு பெருத்தசத்தம் இவர்கள் சேனையிலிருந்து உண்டாகியது. அஃதியாதெனவிசாரித்தஅளவில் மகம்மது கோரியின் சேனையினின்றும் வந்த யாரோவேவுகாரனொருவன் பிடிக்கப்பட்டு விட்டதாகத்தெரியவந்தது. கொஞ்சநேரத்திற்கெல்லாம் பிருதிவிமன்னனிருந்த கூடாரம் நோக்கித்திரளான ஜனக்கூட்டத்தின் நடுவில் ஓர் மகம்மதிய ஒற்றன் மேலெல்லாம் ரத்தம் வடிய ஆண்டிபோலக் காஷாய வஸ்திரம் தரித்தவனாய் உருத்திராக்ஷம் கழுத்திற்றான்ற இரண்டு ராஜபுத்திரவீரர்களால் நெட்டித்தள்ளப்பட்டுக்கொண்டு வரப்பட்டான். தீவர்த்திகள்

0-,3mQL8,K

ஏராளமாகப்பிரகாசித்தன. இவ்வலங்கோலத்தைக் கண்டபிருதிவிமன்னன் மிகவுமிரங்கினவனாய், அவனை யொன்றுஞ்செய்யாதிருக்குமாறு தன் வீரர்களுக்குப் பணித்துப் பிறகு அம்மனிதனுடைய வரலாற்றை விசாரிக்கலானான். ஆண்டிவேஷம் தரித்த துருக்கன் தான்மகம்மதிய சைன்ய சாரனென்பதை ஒப்புக் கொண்டான். பிற்பாடு பிருதிவி அவன் மீதிரக்கங் கொண்டு "அப்பா! இப்பொழுது நான் கேட்பதற் கெல்லாம் உண்மையாக விடையளித்துவிடு. யான் உன்னை விட்டுவிடுகிறேன்" என்றான். அதற்கு துருக்கனும்இசைய, பிருதிவி யவனை யவனுடைய பாதுஷாவின் சைன்யங்கள் அப்பொழுது எங்கிருக்கின்றனவென்று வினவினான். துருக்கன் அவர்கள் சேனை யப்பொழுது தானேஸ்வரத்தைக் கிட்டிக்கொண்டிருக்கு மென்றனன். உடனே பிருதிவி, அவனை அவர்கள் மன்னன் கோரி மகம்மது எங்கிருப்பானெனக் கேட்க, அதற்கவன் தங்கள் மன்னன் மகம்மதிய சேனையில் ஈசான்யதிக்கிலிருப்பானென விடைபகர்ந் தான். அதன் பின்னர் அரசன் துருக்கனை வெளியேற் றித் துரத்திவிடும்படி தன் ஆட்களுக்குக் கட்டளையிட அவனும் 'தலைதப்பியது தம்பிரான் புண்யமென' ஓடிவிட்டான்.

57868

மறுநாட்காலை சைன்யங்கள் யமுனைக்கரை விட்டு வெகு வேகமாய்த் தனேஸ்வரம் நோக்கிப் புறப்பட்டன. குறித்தபடியே அவர்கள் அந்நகர் வந்து சேர இரண்டு நாட்கள் பிடித்தன. இவர்கள் போய்ச்சேருவதற்கு முன்னமேயே நவாபின் சேனை தனேஸ்வரம் வந்து தங்கியிருந்தது. ஆஜ்மீர்சேனைகள் வந்து சேரவும் இரண்டு சேனைகளும் கைகலக்க ஆரம்பித்தன. ஒரு சேனையுடன் இன்னொரு சேனையானது எதிர்க்கும்போது ஒரு கடலோடு இன்னொரு கடல் எதிர்ப்பது போன்றிருந்தது. ஒரு குதிரையின்னொரு குதிரையுடன் எதிர்க்கையில் ஒரு அலையுடன் இன்னொரு அலை மோதுவது போலிருந்தது. மலைக்கும் மலைக்கும் யுத்தம் நடந்தால் எவ்வாறிருக்குமோ அவ்வாறே யானையும் யானையும் எதிர்த்தன. ஒரு சிங்கத்துடன் இன்னொரு சிங்கம் எதிர்ப்பது போன்று ஒரு வீரன் இன்னொரு வீரனை யெதிர்த்தான். ரஜபுத்திரர்களின் கண்களிலெல்லாம் நெருப்புப் பொறி பறந்தன. காலனைக்காலால் கடிந்த கடவுளெவ்வாறு யமன் முன் தோன்றினரோ, அவ்வாறே ஒவ்வொருவனும் தன் எதிரியின் கண்ணுக்குத் தோற்றினன். ஒவ்வொருவர் மனத்திலும் நாம் நம் மன்னனுக்காகவும், நம் சொந்த நாட்டிற்காகவும் சண்டையிடுகிறோ மென்ற எண்ணமும், அவ்வாறு செய்கையில் ஆருயிரிழப்பின் வீரசுவர்க்கம் அடை

வோம் என்ற திண்ணமும், பிரகாசித்துக்கொண்டிருந்தன. முரட்டுத்துருக்கர்கள் மிகவும் மும்மரமாய் யுத்தம் செய்தனர். எனினும், ஒவ்வொரு ரஜபுத்திரன் முன்னும் மகம்மதியவீரர்கள் வசந்தகாலத்தில் மாவிலைகள் உதிர்வனபோன்று மடிந்தனர். யுத்தகளம் முழுதும் ரத்தவெள்ளமானது. இதுவரையில் பச்சைக் கற்கள் பரப்பினாற் போலிருந்த புற்றரையானது இப்பொழுது திடீரென்று ஜாலவித்தைபோன்று ரத்தினக் கற்கள் பரப்பியதரையாய்விட்டது. குருதிப்பெருக்கில் மாண்ட பிரேதங்களின் தலைகள் ஓர் ஆற்றில் வெள்ளம்போகும்போது நீரோட்டமடித்துச் செல்லும் பனங்காய்களை யொத்தன. அநேகஞ்சிற்றரசர்கள் யானைகளின்கால்களிற் கட்டுண்டு உருண்டுகிடந்தனர். எங்கும் ஒரே பிணக்குவியலாயிருந்தது. கடைசியில் பிருதிவிராஜன் யமுனைக்கரையில் துருக்க ஒற்றனிடமிருந்து தெரிந்துகொண்டபடி மகம்மதியசேனையின் ஈசான்ய திக்கை நோக்கிச் சென்றான். அவ்விடத்து, கோரியைக்கண்டு, நெடுங்காலம் பட்டினிகிடந்த சிங்கமொன்று ஒருமானைக்காணுமாகில் எவ்வளவு ஆத்திரத்துடன் அதனைக்கொல்ல விரையுமோ அதுபோல அவனை யெதிர்த்தான். இருவருக்கும் கடும்போர் நடந்தது. பிருதிவி கடைசியில் தன் வாளாயுதத்தால் மகம்மது கோரியின் வலது இடையில் தாக்கவே, உடனே அவன் மூர்ச்சையடைந்து கீழே விழுந்து

விட்டான். அக்ஷணமே அவ்விடமிருந்த துருக்கவீரர்கள் தங்களரசனை அப்புறப்படுத்தினர். இச்செய்தி யுத்தகளமெங்கும் பரவவே, எல்லா ரஜபுத்திர வீரர்களும் மிகவும் மூர்க்கமாய் யுத்தஞ்செய்ய ஆரம்பித்தனர். துருக்கரோ இருக்கமுடியாது ஓடத்தலைப்பட்டனர். ரஜபுத்திரர்கள் ஆட்டுக்கூட்டத்தைத் துரத்தும் புலிகள்போலத் துருக்க சேனையைத் துரத்திக்கொண்டே சென்றனர். பின் துருக்கரிற் பலர் சிறை செய்யப்பட்டனர். ஆகவே, பிருதிவிராஜனே இவ்யுத்தத்தில் முற்றும் ஜயமடைந்தான். முற்காலத்து மகாபாரத, ராமாயண யுத்தமெல்லாம் இந்த யுத்தத்திற்கு ஈடாகாதெனக் கூறலாம் போலிருந்தது.

——:(*):——

நான்காம் அத்தியாயம்.

சம்யுக்தை சுயம்வரம்.

முன் அத்தியாயத்தில் கூறியபடி பிருதிவிராஜன் ஜயங்கொண்டு திரும்பினான். இவ்வாறு வெற்றிமாலை சூடிய பிருதிவிராஜனால் மகம்மது கோரிக்குண்டான தளர்ச்சி ஆறுவதற்கு நெடுங்காலமாகுமென்றும், அவன் சமீபத்தில் படையெடுக்க மாட்டானென்றும் நினைத்து, தைரியத்துடன் கவலையற்றவனாய், ஜயபேரி முழங்க மிகவும் ஆடம்பரத்துடன் சைனியத்தோடு

டில்லி போய்ச்சேர்ந்தான். பிற்பாடு தன்னுடனிருந்து சமர்புரிந்த சிற்றரசர்களுக்கும், வீரர்களுக்கும் அவ ரவர்களுக் கேற்றவாறு பரிசளித்தான். ஜனங்க ளெல்லாம் தங்கள் அரசன் ஜயத்தை மிகவும் சந்தோ ஷத்துடன் கொண்டாடினர். எல்லா அரசர்களும் தம்தம் நாடுபோய்ச் சேர்ந்தனர்.

இஃதிவ்வாருக, பிருதிவிராஜன் மகம்மது கோரியை ஜெயித்தபிறகு ரஜபுத்திர மன்னர்களுக் கெல்லாம் சக்ரவர்த்தி என்ற ஓர் பட்டத்தை வகித்துக்கொண்டான். இதனை மன்னர்களெல்லாம் ஒப்புக்கொண்டாலும் ஜெயசந்தன்மட்டும் ஒப்புக் கொள்ளவில்லை. அவன் தானே மகாராஜ் என்றபட்டம் பெறத் தக்கவனெனத் தாபித்தான். "நானுந்தானே என் சேனையுடன் தனேஸ்வா யுத்தத்திற்குச் சென் றிருந்தேன். அவ்வாருகப் பிருதிவிக்கு மாத்திரம் ஏன் அப்பட்டம்?" என்ற எண்ணமே அவன்மனத் திற் குடிகொண்டது. இன்னும், "தன்னைவிடச்சிறிய வன் சக்ரவர்த்தியாவதா" எனவும் நினைத்தான். ஆகவே, பிருதிவிராஜன் சக்கரவர்த்தியல்ல, தானே சக்ரவர்த்தியென்று எல்லோருக்கும் பகிரங்கப் படுத்தினான்.

ஒன்று மறியாப் பிருதிவியின் பேரில் பொரு மை கொண்டான் ஜெயசந்தன். ஆகா! இப்பொரு

மையின் கொடுமை என்னே! தனக்கு ஒருகண் போனாலும் பாதகமில்லை, தன் அடுத்தகத்தோன் இருகண்ணுமிழந்து பரிதவித்தாற் போதுமென்றன்றோ எண்ணச் சொல்லுகிறது! பிருதிவிராஜன்மேல் ஜெயசந்தன் இவ்விதம் போட்டிபோட யாது காரணம்? உண்மையில் அம்மன்னவன் ஜெயசந்தனுக்கு ஏதாவது தீங்கிழைத்தனனோ? இல்லையே. சாதாரணமாய் பட்டங்கள் வகித்துக் கொள்வது சகஜந்தானே! அவ்வாறிருக்க ஏனோ ஜெயசந்தனுக்குக் கண்ணைக்கரிக்கிறது? 'கேடுவரும் பின்னே மதிகெட்டு வருமுன்னே,' என்பார்களே! ரஜபுத்திரர்களுடைய மகிமையெல்லாம் மாள்வதற்கோ இவ்வித இடையூறுகள் வருகின்றன!

நிற்க, ஜெயசந்தன் இப்பொழுது ஒரு அஸ்வமேத யாகம் நடத்தப்போவதாய் எல்லா அரசர்களுக்கும் அறிவித்தான். ஒவ்வொரு தேசமாய்த் தூதர்கள் சென்று செய்தி தெரிவித்து வந்தனர். தனேஸ்வர யுத்தமாகிப் பத்துமாதங்களாயின. அப் பத்தாமாதம் பன்னிரெண்டாந்தேதி திங்கட் கிழமை காலை எட்டரைமணிக்கு, கடக லக்னத்தில் சம்யுக்தைக்குச் சுயம்வரமெனச் சாரர்கள் ஜகத்திலுள்ள அரசர்களுக்கெல்லாம் செய்தி தெரிவித்தனர். ஆனால் ஜெயசந்தன இவ்வொற்றர்களுக்குப் "பிருதிவியிடம் மாத்திரம் இச்செய்தியை வெளியிட வேண்டா" மெனக் கட்டளை யிட்டிருந்தான்.

எல்லா மன்னர்களும் சம்யுக்தையின் சுயம்வரத்திற்குத் தயாராய்ப் போக, வருந்தேதியை ஆவலுடனெதிர் பார்த்திருந்தனர். மன்னர் ஒவ்வொருவரும் தம்மையே அவள் மணப்பாள் என்ற நோக்கத்துடன் உலகத்திலே கிடைக்க வொண்ணாத ஆடையாபரணங்களை யெல்லாம் முன்னுக்குமுன்னாகவே கொண்டிருந்தனர். சில வேந்தர் சுயம்வரத்திற்கு அங்குத் தம் சேவகரை எவ்வாறு அதிகாரம் புரிவதென்பதை தங்கள் சேவகரைக் கொண்டு சுயம்வரச் செய்தி செவியுற்ற நாள் முதற்கொண்டே பழகி வந்தனர். சில அரசர்கள் தாம் சமயுக்தையைக் கண்டால் எவ்வாறு தங்கள் வதனங்களிற் புன்னகையை கொள்ள வேண்டுமென்பதைத் தினம் பலமுறை நிலைக் கண்ணாடியிற் கண்டு அமைத்துக் கொண்டனர். இன்னுஞ்சில காவலர் தாம் மிகவும் செல்வவானென்பதை யம்மங்கை நல்லாளுணர, சுயம்வரத்தில் ஜனங்களுக்கு ரூபாயாய்த் தானஞ் செய்யலாமா, பவுனாய்த்தானஞ் செய்யலாமா வென யோசித்துக் கொண்டிருந்தனர். வேறு சில அரசர் தாம் உண்மையிற் கருமை நிறமுடையோராயினும் பலவித வாசனைப் பொடிகளால் தம்மைச் சிவப்பாக்கிக் கொள்வதற்காகத் தினம் பல முறை ஸ்நானஞ் செய்தனர். மற்றுஞ் சில மன்னவர்கள் வயோதிகராகிப் பற்கள்விழுந்து விட்டாலும் நாணயமான புதுத்தந்தங்கள் தருவித்துப் பற்களாகக்

கொண்டும், நரைமயிர் கருக்கத்தைலம் போட்டுக் கொண்டும் தம்மை யெளவனர்களாக்கிக் கொண்டனர்.

கன்னோஜியில் கோட்டை மதில்களில்லெல்லாம் மங்கள கலசம் வைக்கப்பட்டது. வீதிகளிலெல்லாம் மகரதோரணங்கள் கட்டப்பட்டன. அஸ்வமேதயாகத்திற்கென்று அரசன் வைத்திருந்த பஞ்ச கல்யாணி என்னும் புரவி நன்றாய் அலங்கரிக்கப்பட்டது. சிற்றரசர்கள் பலர்தங்கள் கப்பங்களைக் கொணர்ந்து ஒப்பித்தனர். கல்யாண மண்டபமானது, முழுவதும் மரகதம், வைரம், கோமேதகம், நீலம் முதலிய நவரத்தினக் கற்களால் இழைக்கப்பட்டுமிகவும் ரம்யமாய்த் தோன்றியது. சுவர்களெல்லாம், தங்கம், வெள்ளி முதலிய விலையுயர்ந்த உலோகங்களால் மேலே மூடப்பட்டிருந்தன. ஒருவரிசையில் இளவரசர்களெல்லாம் வீற்றிருத்தற்கு ஆசனமமைக்கப்பட்டிருந்தது. ஒரு சார்பில் ஸ்திரீகள் வீற்றிருக்க இடமிருந்தது. பொது ஜனக் கூட்டத்திற்கும் தனியிடமிருந்தது. எல்லாவற்றிற்கும் நடுவே ஓர் உயர்ந்தபீடமிருந்தது. அதற்கு மேலே ஓர் பெரிய தங்கக் குடை பலவிதக் கற்களாலிழைக்கப்பட்டுப் பளபள வென்று மின்னிக்கொண்டிருந்தது. அதற்கு நேராக ஓர் பெரிய நிலைக் கண்ணாடி வைக்கப்பட்டிருந்தது. இதில் வைத்திருத்தான்

மணமகனைத் தேர்ந்தெடுத்தபின் தம்பதிகளுக்கு முறைப்படி விவாகம் நடத்துவார்கள். இன்னும் பொற்பாவைகள் பல தீபங்களேந்தி நின்றன. பல விதக் கற்களாலேயே தோரணங்கள் கட்டப்பட்டன. அம் மண்டபத்தைப் பார்த்தோர் 'அது இந்திர சபையோ' வென்று சங்கை யுறுவர்.

சுயம்வரத்திற்கு இன்னும் ஒருநாள்தானிருக்கிறது. எல்லாத்திக்குகளினின்றும்வேந்தர் பலர்வந்து சேர்ந்தனர். அவரவர்களுக்கு ஆங்காங்கே விடுதிகள் அமைக்கப்பட்டன. எல்லா நாடுகளினின்றும் திரள் திரளாக ஜனங்கள் வந்துகொண் டிருந்தனர். கன்னோசி நகரில் ஓர் ஆள் நிற்கவு மிடமில்லாமல் போய் விட்டது. எங்கே பார்த்தாலும் ஜனங்கள் "அரசனுக்கு ஒரேபுதல்வி; சுயம்வரம் மிகவும் சம்பிரமமாய் நடத்துவான்" எனப் பேசிக் கொண்டனர். சுயம்வரத்திற்கு வந்த அரசரெல்லாம் 'சம்யுக்தையை எப்பொழுது காண்போம், பொழுது சீக்கிரம் போகாதா' எனவே நினைத் திருந்தனர்.

நிற்க, டில்லியிலுள்ள ஜனங்களும் கூட்டங் கூட்டமாய்ப் பிரயாணப்பட்டுக்கொண்டே யிருந்தனர். அப்பொழுது பிருதிவிராஜன் வேட்டையிலிருந்து வந்துகொண்டிருந்தான். வரும் வழியில் மிகவும் வேக

மாய்ப் போய்க் கொண்டிருந்த ஓர் பிராமணனை நோக்கிப் பிருதிவி, "ஐயா! இந்த ஜனங்களெல்லாம் எதற்காகச் செல்கின்றனர்? விசேஷமென்ன?" என்று கேட்டான். அதற்கம்மறையோன், "நீர் யாரையா? உம்மைப் பார்த்தால் ரஜபுத்திரா போல் இருக்கிறது. என்ன ஐயா! விளையாட்டா செய்கிறீர்; உமக்குத் தெரியாமலா யிருக்சப் போகிறது?" என்றான். உடனே மன்னவன், "இல்லை ஐயா! அவ்வாறல்ல. எனக்கு வாஸ்தவமாகவே ஒன்றுந்தெரியாது. யாது விசேஷம்?" என்று மீண்டும் கேட்டான். அதற்கவ் வேதியன் "ராஜகுமார! கன்னோசி என்ற நாடு கிழக்கே யிருக்கின்றது. அதனை ஆள்பவன் ஜெயசந்தனென்போன். அவன் நாளையதினம் ஓர் அஸ்வமேத யாகம் செய்யப் போகின்றான். அப்பொழுதே தன் மகள் சம்யுக்தைக்கும் சுயம்வரம் குறித்திருக்கிறான்" என்று செப்பினான். இதனைக்கேட்ட மன்னவன், "ஆ! அப்படியா!" என்று சொல்லி மயங்கி நின்றான். உடனே அந்தணன், "அப்பா! என் இவ்வாறு மயங்குகிறாய்?" என்று கேட்டான். அதற்குப் பிருதிவி, "மறையவர் திலக! ஒன்றுமின்று. சம்யுக்தைக்கா சுயம்வரம்?" என்று மறுமுறையும் அழுத்திக் கேட்டான். பிராமணன் "ஆம்" என்று கூறித் தன் வழிச் சென்றான்.

தனியே விடப்பட்ட பிருதிவி ஒன்றுந் தோன்றுனாய்ச் சிறிது நேரந் தயங்கிநின்று, பிற்பாடு குதிரை மீதேறிக் காற்றினுங்கடுகித் தன் அரமனை வந்து சேர்ந்து தன் அந்தரங்க அறைக்குச் சென்று மஞ்சத்துள் ஒன்றும் தோன்றுனாய் மடேரென வீழ்ந்தான். சிறிது நேரம் சென்றது. பிறகு, "ஆகா! இப்படியா செய்தான்? எனக்கு ஏனோ கடிதம் வரைந்தனுப்பவில்லை? என் மீது இவ்வளவு பொருமையா? ஆ! சம்யுக்தா! உன் தந்தை ஒரு காரணமுமின்றி இவ்வாறு இருக்கிறாரே; இதற்கென் செய்வது? என் காதற்கிளியே! நீயாவது சென்று உன் தந்தையின் மனத்தை மாற்றுயா? ஆ! கண்மணி! நல்லவேளையாய்ப் போய் விட்டதே! நான் ஏமாறவும், ஏமாற்றவு மன்றோ இருந்தேன்! என் கண்ணாட்டி! இது காறும் நீ என்ன செய்துகொண்டிருக்கிறாயோ! ஒருவேளை என்னை நினைந்து 'நான் வரவில்லை' யென வருந்துகிறாயோ! என்னை உன் தந்தை ஜெயசந்தன் அழையாவிடிலென்ன? சுயம்வரத்திற்கு முக்யஸ்தையான உனதுகாதலன்றோ யழைக்கின்றது. எனினும் இதே உடையுடன் சென்றால் நன்றாயிராதாதலின் ஓர் பாடக னுருக்கொண்டு அங்கு வருகிறேன்." என்று மனத்துள்ளெண்ணித் தன் இன்னுயிர்த்தோழன் ஜெயசிங் முதலியவர்களுடன் வேற்றுடைதரித்து, டில்லியை நீங்கிக் கனோசிக்குப் புறப்பட்டான். இன்னும், தன்னுடைய

சிறு சேனையொன்றை ஒருவருக்கும் தெரியாது கல்யாண மண்டபத்திற்குப் பின்புறம் இருக்கச் சொல்லிச்சென்றான்.

இஃதிவ்வாறிருக்க, கன்னோசியில் அஸ்வமேதயாகத்திற்கும்வேறாய் ஆயத்தமாகிக்கொண்டிருந்தது. சம்யுக்தையோ பிருதிவி மன்னனை நினைந்து நிமிஷமொரு யுகமாகக் கழித்து வந்தாள். 'அன்னவர் இன்னும் வரவில்லையே; என்ன செய்வோம்? என்ற எண்ணமே அவளுடைய மனதிற் குடிகொண் டிருந்தது. தனக்குச் செய்த மரியாதைகளையும், அலங்காரத்தையும் அவள் ஒரு சிறிதும் மதித்தாளில்லை. கடவுளிடம் அந்தரங்க பக்தனொருவன் எவ்வாறு உலக விவகாரங்கள் அவன்முன் பல நடந்தாலும் அவற்றையெல்லாம் அலட்சியஞ்செய்து, தன்னறிவை அச் சச்சிதாநந்தத்திலேயேபதிய வைப்பானோ அவ்வாறே சம்யுக்தையுந் தன்னைச்சுற்றிப் பல நிகழ்ந்தாலும் ஒன்றையுங் கவனியாதவளாய்த தன் எண்ணத்தையெல்லாம் பிருதிவி ராஜனிடமே வைத்திருந்தாள். அதிகம் சொல்லுவானேன்? அவள் உடலே கன்னோசியிலிருந்தது. அவள் மனமோ அப்படியே பிருதிவிக்கு அடிமைப்பட்டு விட்டது. இவ்வாறு வருந்திக்கொண்டிருந்த சம்யுக்தை கொஞ்ச நேரத்தில் 'தன் தந்தை பிருதிவி மன்னனுக்கு லிகித மனுப்ப வில்லை' என்பதையறிந்

தாள். இன்னும், அவர் தன் காதலனின் உருச் சிலை யொன்றை வாயிற்காப்போனாக வைக்கப் போவதாகவும் கேள்விப்பட்டாள். உடனே மூர்ச்சையாகிவிட்டாள். அவளுடைய தோழிமாரெல்லாம் அவளைத்தன் நினைவிற்குக் கொண்டு வந்தனர். பிறகு சம்யுக்தை ஒன்றுந் தோன்றாது பித்துப்பிடித்தவள்போ லானாள். கடைசியில், "என்னவரினுஞ்சரி, நான் அவ்வுருவிற்கே மாலையிடுவேன்" என்ற தீர்மானத்தைக் கொண்டாள்.

இஃதிவ்வாறாக, சம்யுக்தை படுமவஸ்தையைப் பார்க்கச் சகியாது பரிதியும்மேற்றிசை யடைந்தான். குரூபமுள்ள சந்திரனும் தன் குரூரத் தன்மையைக் காட்டப் புறப்பட்டு விட்டான். பொழுது விடிந்தால் சுயம்வரம். அன்று மாலையிலேயே பிருதிவி மன்னன் மாறுவேடத்துடன் கன்னோசி வந்து விட்டான். வேற்றரசர்களுக்கு அன்றிரவு தூக்கமே யில்லை. அநேகர் தாங்கள் சம்யுக்தையை மணப்பதாகத் துயிலிற் கனவு கண்டனர். சம்யுக்தை, தன் காதலனுக்குத் தன் தந்தையா லிழைக்கப்பட்டுள்ள அவமானத்தை நினைந்து வருந்தினாள். பிருதிவியின் படத்தை யடிக்கடி கண்ணுற்றுக் கண்ணீர் வடித்தாள். ஊர்ச்சனங்களெல்லாம் மறுதினம் நடக்க இருக்கும் மணத்தை நினைந்து "தம்நாட்டிற்கு எத்தேசத்தான் அரசுரிமைக் குருகனுவானோ" வென யோசிப்பதிலேயே தம்

பொழுதைக் கழித்தனர். அவர்களிற் சிலர், "என்ன வானலும், அரசன் பிருதிவி மன்னரையழையா திருந்தது பிழையேயாகும்" என்றனர். பிருதிவிமன்னனே 'நாளைத்தினம் என்னநடக்குமோ' என்று ஏக்க முற்றிருந்தான். எல்லோரும் 'அன்றைய இரவு சீக்கிரம் கழியாதா' எனவே கருதியிருந்தனர்.

அவர்களிஷ்டப்படியே பொழுதும் புலர்ந்தது. சம்யுக்தையின் மனத்திலும் ஓர் விதத்திண்ணம் பதிந்தது. வாயிற்சிலைக்கே மாலையிடுவதாக முடிவு செய்து கொண்டாள். வேதியர்கள் அஸ்வமேதயாகத்திற்கு வேண்டியவற்றை யெல்லாம் செய்து முடித்தனர். காலை ஏழுமணியாகியது. சம்யுக்தைக்கு மங்களஸ்நான முதலியவெல்லாம் நடந்தன. தெய்வங்களை யெல்லாம் தொழுது துகிலுடுத்தினர். அவளுக்கு அலங்கரித்து, 'அவளுடைய அளவுகடந்த அழகினை யாருங்கண்டு, திருஷ்டியிடா வண்ணம் திருஷ்டிப் பரிகாரமாய் நகைகள் பூட்டப்பட்டனவோ' வெனத் தோற்றியது. நெற்றியில் அழகாய்த் திலக மிட்டனர். அன்னவளும் 'ரதிதேவியோ அன்றித் திருமகளோ' வெனக் கண்டார் சங்கையுறுமாறு தோன்றினள்.

மணி எழரையாய் விட்டது. அரசர்களெல்லாம் தத்தம் ஆதனத் தமர்ந்தனர். ஒவ்வொரு மன்னனும்

காதற்றீயினுல் தகிக்கப்பட்டுக் கொண்டிருந்தான். எல்லாரும் இருந்தவிடம் பெயராது "சம்யுக்தை எப்பொழுதுவருவாள், அவளை எப்பொழுது காண்போ" மென்ற எண்ணமே மேலிட்டவராய் மயங்கியிருந்தனர். சிலர், தங்கள் வைரமோதிரங்களைத் துடைத்துக்கொண்டும், கையைத்தூக்கி அம்மோதிரத்தைப் பிறருக்குக் காட்டிக்கொண்டு மிருந்தனர். இன்னும்சிலர், தங்களுடைய விலைமதிக்க வொண்ணுத மேலாடையைக் கீழே போடுவதும், எடுத்து மறுபடியும் மேலே போட்டுக்கொள்வதுமாய் இருந்தனர். இன்னுஞ்சிலர், சம்யுக்தையை எவ்வாறு வரவேற்ப தென்பதைப்பற்றித் தங்கள் முகங்களைப் பலவிதமாய்க் கோணல் செய்துகொண்டிருந்தனர். இவர்களிவ்வாறிருக்கையில் இவர்கள் 'காதல் தீக்கு விறகிடுவது' போல் சம்யுக்தையும் அவ்விடம் தோன்றினுள். இரண்டு தோழியர் அவளுடன்வந்தனர். அவ்விரு தோழியரும் சற்று முன்னே நடந்து சம்யுக்தையைக் கூட்டி வந்தனர். சம்யுக்தை ஒருவரையும் பாராது தன் கால் கட்டை விரலையே நோக்கியவளாய் அத்தோழியரைத் தொடர்ந்து வந்தாள். அவளைக்கண்ட அரசர்களெல்லாம் நிமிர்ந்து உட்கார்ந்தனர். வயது முதிர்ந்து கூன் விழுந்த மன்னருங்கூட நிமிர்ந்து 'பதினெட்டு வயதுக் காளைப் பருவத்தவர்' போலத் தோன்றினர். தோழிமார் ஒவ்வொரு அரசர் அருகிலும் ராஜபுத்திரியை

திறுத்தி வைத்து, அவ்வவரசருடைய பெருமையை யும், நீதியின் பரப்பையும், வீரச்செயல்களையும் கூறி வந்தனர். சம்யுக்தை ஒவ்வொரு அரசராகப் புறக் கணித்துக் கொண்டே வந்தனள். ஏமாந்த மன்னவ ரெல்லாம் 'அவள் யாரைத்தான் தேர்ந்தெடுக்கிருள்' என்பதைக் காண மிக்க ஆவலுடன் எதிர்பார்த்திருந் தனர். கூடியிருந்தவர்களெல்லாரும் ஒன்றும்பேசாது நிசப்தமாயிருந்தனர். இன்னும் நாலைந்து மன்னர்கள் தானிருக்கிருர்கள். சிலர், "காஷ்மீரதேச கங்காதரரையு மன்றே உதறிவிட்டாள்" என்றனர். இன்னும் சிலர், "பங்காளதேசத்துப் பலதேவரையுமன்றே புறக்க ணித்துவிட்டாள்" என்றனர். வேறு சிலர், "கோங் கண நாட்டுக் கோபால சிங்கையு மன்றே மதித்தா ளில்லை" என்றனர். மற்றுஞ்சிலர், "காந்தார நாட்டுக் காண்டீப சிங்கரையு மன்றே எறிட்டுப் பாராதிருந்து விட்டனள்" என்றனர். பின்னுஞ்சிலர், "இவ்வளவு பேரை விட்டுவிட்டு வேறு யாருக்குத்தான் போடப் போகிருள் பார்ப்போம்" என்று ஆவலுடன் எதிர் பார்த்திருந்தனர்.

சம்யுக்தை மீதமிருந்தவருள் மூவரைத் தாண்டி விட்டாள். உடனே எல்லோரும் நாலாமவனுகிய மாளவநாட்டு மதிவதனனையே அவள் மணப்பாளெனக் கருதிக் கரகோஷஞ்செய்தனர். அதே தருணத்தில்

அவள் அவனையுந் தள்ளிவிட்டு, அவனுக் கருகிலே யிருந்த பிருதிவியின் உருவச்சிலைக்கு மாலையிட்டு நின்றனள்.

ஆகா! ரஜபுத்திர ஸ்திரீ ரத்தினங்களின் மனோ தைரியந்தா னென்னே! தாங்கள் ஒரு முறை வரித்த கணவனைத் தவிர வேறு எவரையும் ஏறிட்டுமன்றோ பாரா திருக்கின்றனர்! இதற்காகத் தங்கள் தந்தையின் சொல்லையுமன்றோ புறக்கணித்து விடுகின்றனர். இதுவன்றோ கற்புடைய மங்கையரின் மனோ வீரமாகும்.

வாயிலில் வைக்கப்பட்ட விக்ரகத்தின் பேரில் மாலை விழுந்ததோ இல்லையோ! சம்யுக்தையின் இடையில் அவளுக்கு இதமான இரண்டு கரங்கள் வந்து பற்றின. உடனே அவள் தன் காதலனுடன் ஓர் புரவி மீது ஆலிங்கனஞ் செய்யப்பட்ட நிலையி லிருந்தாள். சந்தோஷம் கரைகடந்து பொங்க வாரம்பித்தது. பிருதிவியும் மிகவும் ஆனந்தப் பரவசனானன். உடனே ஜெயசந்தன் கோபமூண்டவனாய், மீசை துடித்திட, முகஞ் சிவந்திட, பற்கள் 'நற நற' வென்று கடிபட ஒன்றும் பேசமாட்டானாய், "ஆ பாவி! சம்யுக்தா! என்ன காரியஞ் செய்தாய்? என் மானமன்றோ போகிறது! ஏ! துரோகி!" என நொந்து, "அப்போக்கிரியை விடாதீர்கள்! பிடியுங்

கள்! பிடியுங்கள்!! திருட்டுப்பயல்!" என்று அரசர்களை நோக்கிக் கூறினன். அவர்களிற் சிலர், "இதேதடா! கல்யாணமென்று வந்தால் கழுத்துக்கு வருகிறது," என்று சொல்லிக் கொண்டு புறப்பட்டனர். அனேகர், "பிடிடா! விடாதே!!பிடியவனை!!!" என்று இரைச்சலிட்டுக் கொண்டு பிருதிவியைப் பின் தொடர்ந்தனர். பிருதிவி ராஜனும் இருந்த இடம் தெரியாது வாயுவேக மனோவேகமா யோடிவிட்டான். சம்யுக்தை கடவுளின் மகிமையை நினைந்து வியந்துகொண்டே சென்றனள். இதற்குள், பிருதிவி ராஜன் சுயம்வர மண்டபத்திற்குப் பின்புறம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சேனை வந்துதோன்றிக் கன்னோசி சேனையை யெதிர்த்துக்கொண்டது. இரு திறத்தார்க்கும் போர் நடந்தது. டில்லியிலிருந்து வந்த பிருதிவியின் சேனை தங்கள் மன்னன் தன் தலைநகர் சேர்ந்திருப்பானெனத் தெரிந்த வுடனே மெதுவாய்ப் பின்னடைந்து, தந்திரமாய் டில்லிவந்து சேர்ந்தது. ஜெயசந்தனோ 'தன்மகள் வந்தால் அவளை இருதுண்டாய் வெட்டி யெறிந்துவிட்டுத் தானும் மடியலாமா' வென எண்ணுவான். எல்லாம் போக 'அக் காவற்காரப்பயல் பிருதிவிக்கா மாலை யிடுவது, என உறுமுவான். என் செய்தும் ஆவதென்ன? காதலைக் காதல் வென்றது. அதனைத் தடுப்பார்யார்? இவனுடைய கோபம் அதனை அசைக்கவு முடியுமா ?

பிருதிவி ராஜன் சம்யுக்தையுடன் டில்லி வந்து சேரவும் அவனை யெதிர்கொண் டழைக்க அனேக மன்னர்கள் அரமனை வாயிலில் காத்துக்கொண்டிருந் தனர். கோட்டைக்குள் நுழையும்போது, ஆங்கு கூடியிருந்த குடிகளின் கோஷம் கூறிமுடியாது. ஜெய பேரிகை முழங்கியது. பலவித வாத்தியங்கள் ஒலித் தன. "ஜெய, ஜெய, ஜெய" என்ற சப்தமே அவ்விடத் தை யாண்டுகொண்டிருந்தது. குதிரையும் அரமனை வாயில் வந்து நின்றது. மறுநாளே "முறைப்படி மணம் டில்லியில் நடைபெற வேண்டு"மென்று குடிக ளெல்லாம் முன்னாடியே நகரலங்காரஞ் செய்திருந்த னர்.

ஆஹா! ரஜபுத்திர வீரமே வீரம்! பிருதிவி இவ் விதம் செய்யாதிருப்பின் சம்யுக்தை சாகவேண்டிய தேயன்றி வேறின்று. என்ன நேரிட்டபோதிலுஞ் சரி, தன்னின்னுயிருக்கே இன்னல் வரட்டும். தன் னைக் காதலித்த மின்னாளைக் காப்பதே கடனென் றன்றோ கொண்டான்! இவனன்றோ சுத்தவீரன்!

நிற்க, 'மறுநாளே திருமணம் நடைபெறு'மென வதந்தி பரவியது. அதன்படியே அடுத்தநாள் ஆத் தான மண்டபத்தே அந்தணரிட்ட முறைப்படி சம் யுக்தையைப் பிருதிவி பாணிக்கிரகணம் செய்து கொண்டான். கண்டோர் கண்களி லெல்லாம்

ஆனந்தக்கண்ணீர் பொங்கி யெழுந்தது. "மண மகட்கேற்ற மணமகன் இதுவரையில் இதுபோல அமைந்ததில்லை யெனவும், இனிமேலும் அமைவ தருமை" யெனவும் எல்லோரும் பேசிக்கொண்டனர். அவர்கள் ரதியும், மதனும் போலவும், திருமாலும், திருமகளும் போலவும் தோற்றினர். தேவர்கள் பூமாரி பொழிந்தனர். எல்லா வாத்தியங்களு முழங்கின. ஜனங்களெல்லாம் பிருதிவியின் வீரத்தைப் பற்றிப் பற்பல விதம் புகழ்ந்தனர். சம்யுக்தையின் மன உறுதியைப் பற்றியும் வியந்தனர். ஆகவே, திருமணம் வெகுவிமரிசையாய் நடந்தேறியது. சிலர், "நம் மன்னனுக்குச் சீக்கிரம் ஓர் ஆண் மகவு பிறக்க வேண்டும்" எனத் தங்கள் தெய்வங்களைப் பிரார்த்தித்தனர். ஜெயசந்தன் தவிரமற்ற மன்னரெல்லோருக்கும், 'ஒருவேளை தங்களைச் சம்யுக்தை மணக்கிலாளென்ற நோக்க மிருப்பினும் அன்னவளுக்கேற்ற ஆடவன் பிருதிவியே' யென மனத்திற் பட்டது.

ஐந்தாம் அத்தியாயம்.

ரஜபுத்திர ராஜ்யத்தின் சீர்குலைவு.

மூன் அத்தியாயத்தில் கூறியபடி பிருதிவி ராஜனுக்கும், சம்யுக்தைக்கும் டில்லிமா நகரில் கல்யாணம்

நடந்தது. "எப்படியும் மணந்தான் முடிந்து விட்டதே, இனியாகிலும் ஒற்றுமையாயிருந்து விடுவோ" மென்று தோற்றியதா ஜெயசந்தனுக்கு? இல்லவே இல்லை. பொறாமை யென்னும் கொடிய நஞ்சு 'புளிய மரத்தைப் பிடித்த பேய்' போல் அவனைப் பற்றிக் கொண்டிருக்கிறதே! அவ்வாறிருக்க, ஜெயசந்தன் எவ்வாறு சும்மா இருப்பான்? இன்னும், விதி யாரை விட்டது? ரஜபுத்திரர்கள் ஜன சௌக்கியமே தம் குறியாய், தங்கள் நாட்டி லெங்கும் சமாதானம் குடி கொள்ளும்படியாய் ஒரு குடைக்கீழ் ஆண்டு வந்த செங்கோல் தலை கவிழக் காலம் வந்திருக்க அதனைத் தடுக்க யாராலாகும்? விதியைத் தடுக்க வல்லாரு முளரோ!

* "ஆவது விதியெனி னனைத்து மாயிடும்
போவது விதியெனி னெவையும் போகுமால்
தேவருக் காயினுந் தீர்க்கத் தக்கதோ
ஏவரு மறியொணு ஈசற் கல்லதே."

ஒற்றுமை யில்லாக் குடி ஒருமிக்கக் கெடுமன்றே! எருதுகள் நான்கைச் சிங்க மொன்று எதிர்த்துக் கொன்றதெதனால்? அவைகளுள் 'ஒற்றுமை' யென்னும் ஓர் குணம் ஒழிந்ததனாற்றானே! இன்னும், 'ஊர் இரண்டாயின் கூத்தாடிக் கெளிது' என்கிறார்களே! இவ்வா றெல்லா மிருக்க ஜெயசந்தன்

* ஸ்கந்தபுராணம்.

இவ்விதம் செய்யப் புகுந்தால் என் ரஜபுத்திர சீலம் குறைவு படாது?

ஜெயசந்தனுக்கோ பிருதிவியை "எவ்வாற்றுனும் மான மிழக்கச் செய்து, அவன் பதவியைத்தா னடைய வேண்டு" மென்ற எண்ணம் முதலிலேயே கொண்டிருந்தது. அவ் வெண்ணம் பிருதிவி கொண்ட தனேஸ்வர யுத்த ஜெயத்தால், நெருப்பிற்கு 'விறகிட்டது போல், அதிகமாகிப் 'பசுமரத் தாணி' போல் ஜெயசந்தன் மனதிற் பதிந்து விட்டது. இப்பொழுதோ, 'கெடுவான் கேடு நினைப்பான்' என்பது போல், பிருதிவியை மான மிழக்கச் செய்பவன் தன் மானத்தையே காப்பாற்றிக் கொள்ளக் கையற்று விட்டான். தன் இன்னுயிர்ப் புதல்வியைத் தன் பகைவன் கவர்ந்து, அவனெண்ணியபடி செல்லத் தான் யாதொன்றும் செய்ய இயலாது பார்த்துக் கொண்டிருக்க நேரிட்டு விட்டது. இந்த அவமானம் முன்னர் 'விறகிட்ட பொறாமைத் தீக்கு நெய் வார்த்ததுபோ' லிருந்தது. இதனால் அவன் பொறாமை யளவு கடந்து வளர்ந்து விட்டது. பிருதிவியின் உயிரையே போக்கிவிடத் தீர்மானித்தான். ஆனால் இந்தியாவில் பிருதிவியை எதிர்ப்பார் எவருமில்லை. பிருதிவி பக்கஞ் சார்ந்து பிருதிவிக் கெதிரியைப் புறங்காட்டி யோடச் செய்பவர்களே மிகுங்

திருந்தனர். தன்னுடைய சேனையோ பிருதிவியின் சேனையைக் காட்டிலும் அவ்வளவு விலிமை வாய்ந் ததுமல்ல. என்னசெய்வான்? கடைசியில், தனேஸ் வரத்தில் புறங்கொடுத்தோடிய துருக்கனுகிய மகம் மதுகோரியைத் தனக்கு 'உதவி புரிய வரவழைக்க வேண்டு' மெனத் தீர்மானித்தான். உடனே துருக்க னுக்கு ஓர் லிகிதம் வரைந்தான். என்னே இவன் புத்தி! தன் வீட்டுக்குள் நடந்த சச்சரவுக்கு ஊராரை மத்தி யஸ்தம் வைக்கிறதா! அந்தோ! ரஜபுத்திர குலப்பெ ருமையைக் குலைக்கவந்த கோடாரிக் காம்பானுனே! இதுவரையிலும் இந்தியாவில் நடவாததும், இந்திய மன்னர்களெல்லாம் செய்ப நாணக் கூடியதுமான, அன்னிய நாட்டானைத் 'துணைக்கொள்ளல்—அதுவும் தன் இனத்தார்க் கெதிராகவே துணைக்கொள்ளல்' என்ற செயலைக் கூசாது செய்யத் துணிந்தானே! இதற்கு இவனைக் குறைகூறி யாதுபயன்.? அவனிடங் குடிகொண்ட பொறாமையையும், ரஜபுத்திருடைய அரசாட்சி குலைய வேண்டுமென்ற விதியையு மன்றோ நோக்கவேண்டும்!

கோரிமகம்மதுக்கு எழுதி யனுப்பிய கடிதம் அவனிடம்போய்ச் சேர்ந்தது. அவன், 'கஞ்சிவ ரதப்பா வென்ருல், எங்கு வருதப்பா' எனக் காத்தி ருப்பவனுதலால் உடனே யதற்கு உடன்பட்டு விட் டான். அவன் பக்ஷம் அதிர்ஷ்டதேவதையின் கடா

கூமு மிருந்தது. உடனே மறுகடிதம் அவ்வாறே செய்வதாக எழுதி ஜெயசந்தனுக்கு அனுப்பிவிட்டான். அதன்படியே தன் திரண்ட துருக்க சேனையுடன் இந்துஸ்தானம் வந்து சேர்ந்தான். ஜெயசந்தனுக்கு எழுதியிருந்த கடிதத்தில் மகம்மதுகோரி, "தான் முதலில் பிரிதிவிையை எதிர்ப்பதாகவும் அப்பொழுது ஜெயசந்தன் பிருதிவியின் மனது திடுக்கிடும்படி திடீரென்று தன்பக்கம்வந்து சேர்ந்துகொள்ளவேண்டு" மென்பதாகவும் எழுதி யிருந்தான்.

டில்லியில் ஓர்நாள் பிருதிவிராஜன் தன் இன்னுயிர்க் காதலியுடன் சரச சல்லாபமாய்ப் பேசிக்கொண்டிருக்கையில் அவனுடை ரகசியவீரன் ஓடோடியும் அவண் வந்து, "அரசே! நம் நாட்டின்மீது ஜெயசந்தரும், மகம்மதுகோரியும் கலந்து படையெடுத்து வருவதாகச் சாரர்கள் மொழிந்தனர்" என்றான். உடனே பிருதிவி திடுக்கிட்டான். சம்யுக்தையும் மிகவும் வருத்தமுற்றாள். தன் தந்தையின் மதியீனத்தை நினைந்து மயங்கினாள். அவளென் செய்வாள் பாவம்! அவள் செய்த குற்றமல்லவோ இது. காதலென்பது கடவுளால் அளிக்கப்பட்டதன்றோ! ஐம்பொறிகளை அடக்கி உலகப்பற்றை யொட்டவிட்ட தபோதனருமன்றோ அதற்கடிமை யாகின்றனர்! அவ்வாறாக, வெறும் மானிடம்; அதிலும் பேதைப்பெண்ணவாள்; இவளென் செய்வாள்?

சற்று நேரம் பொறுத்து, பிருதிவி ராஜன் தன் வீரனை நோக்கி, "நீ சீக்கிரம் சென்று நம் மந்திரியினிடம் நம் சேனைகளைத் தயாராய் யுத்தத்திற்கு ஆயத்தமா யிருக்கும்படி செய்யச்சொல். யானும் தயாராக வருகிறேன்." என்று கூறி அவனை யனுப்பினான். சேவகன் சென்றவுடன் சம்யுக்தை நாயகனை நோக்கி, "பிராணநாதா! ஐயோ என் செய்வேன்!" என்று அழ ஆரம்பித்தாள். உடனே மன்னன் அவளை நோக்கி "யழுவதழகல்ல'வென்றும், ரஜபுத்திர ஸ்திரீகள் இவ்வாறு செய்தல் குலத்திற்கீன" மென்றும், இன்னும் இதுபோன்ற பலவிதமான உறுதியுரை கூறியும் அவளைச் சற்றே தேற்றினான். பிறகு சம்யுக்தை தன் நாதனை நோக்கி "ஐயனே! நான் எவ்வாற்றாலும் என் தந்தையை இச் சமருக்கு வரா வண்ணம் செய்து விடுகிறேன்," என்றாள். அரசன் அப்பொழுது எதிலேயோ ஆழ்ந்து யோசிப்பவன்போ லிருந்து, திடீரென யுத்தத்திற்கு வேண்டியவைகளைத் தயார் செய்ய விடைபெற்றுச் சென்றான். சம்யுக்தை யிப்பொழுது தன்னந்தனியே யிருப்பவள் கடவுளை நோக்கி,

"பெண்ணென்றாற் பேயு மிரங்காதோ பின்னுமக்குக்
கண்ணிலையோ செப்புங் கடவுளர்காள்! கண்ணுக்குக்
கண்ணாகு மென்னுயிர்க் காவலனைக் காவீரோ
புண்ணாகும் போரிற் புரிந்து"

என்று துதித்தாள். பிறகு திடீரென அவ்விடம் விட்டுத் தன் தோழியை யடைந்து, அவளிடம் விஷய முழுவதும் வெளியிட்டாள். அதன்பிறகு அவளிடம் "என தருமைத் தோழியே! நீ இப்பொழுது எனக்கு ஓர் உதவிபுரிய வேண்டும். அதாவது நீ உடனே சென்று, உனக்கு ஓர் ஆணுடையும், எனக்கு ஓர் ஆணுடையும் அதிவிரைவிற் கொண்டு வரவேண்டும்" எனக் கூறி யனுப்பினாள். அதன்படியே அவளும் இரண்டு வீரர்களினுடையைக் கொண்டுவர, இருவரும் அவற்றை யணிந்து கொண்டனர். இதற்குள் ஆஜ்மீருக்கருகே ஓர் துருக்க, ஜெயசந்த சேனைகள் பாளய மிறங்கி யிருப்பதாகச் செய்தியுணர்ந்து, இருவரும் தனித்தனி ஒவ்வோர் புரவி மீதேறி ஆஜ்மீர் நோக்கிப் புறப்பட்டனர்.

பிருதிவி ராஜனுடன் டில்லி நகரச் சேனைகளும் தயாராய் அவ்விடம் வந்து சேர்ந்தன. தேவர்கள் சேனையை நடத்திச் சென்ற முருகக் கடவுளைப் போன்ற பிருதிவி தன் சேனை நடுவிற் பொலிந்தான். அவர்க ளெல்லாம் அன்றிரவு ஓர் தோப்பில் பாளைய மிறங்கினர்.

இஃதிவ்வாறாக, இரவோ மிகவும் பயங்கரமா யிருந்தது. நரிகள் ஊளையிடும் சப்தம் தவிர வேறு ஒன்றும் கேட்கவில்லை. அத் தருணத்து ஜெயசந்தன்

இறங்கியிருந்த கூடாரத்தை நோக்கி இரண்டு வீரர்கள் வந்து ஒருவரு மறியாது அக் கூடாரத்திற்குள் நுழைந்தனர். இவர்களைக் கண்டதும் கூடாரத்துளிருந்த ஜெயசந்தன் 'பகைவரோ' வென நினைத்துத் திடுக்கிட் டெழுந்தான். ஆனல் விஷயம் அவ்வாறன்று. அவ்விருவரு ளொருவர், அவன் காலடியில் சாஷ்டாங்க தண்டம் சமர்ப்பிவித்து வணங்கி நின்று, "தந்தாய்" என்றனர். அச்சொல் செவியில் விழவும் ஜெயசந்தனுக்கு நாராசம் இடுவதுபோ லிருந்தது. உடனே அவன், "சம்யுக்தா! நீயா! ஏது இந்த நள்ளிருளில், அதுவும் அகாத வேளையில் இவ்விடம் வந்துற்ருய்? என்ன விசேஷம்? உன் கணவன் ஏதாவது சமாதானத்திற்கு வேண்டுகிருனே?" என்று கேட்டான். அதற்குச் சம்யுக்தை, "தந்தாய்! அவர் கூறி யான் வந்தவளன்று. நானுகத்தான் வந்தேன். எதற்காக வீணில் ரஜபுத்திரர்களின் மகிமையை வீணுக்கிக் கொள்ளவேண்டும்; இதற்காகவா யுத்தம் செய்வதென்பதை நினைத்து, உம்மை யுத்தத்தினின்றும் தவிர்க்கவே யானிவண் வந்தேன். என்னவோ, பிருதிவி மன்னருக்காக இல்லா விடினும் எவ்வளவோ பரம்பரையாய் எழில் மிக்கு வழங்கி வரும் நமது ரஜபுத்திர வம்சத்தின் மேன்மைக் காகவும், தம்முடைய இன்னுயிர்ப் புதல்வியாகிய எனக்காகவுமேனும் தயவுசெய்து போரை நிறுத்திவிடும்" என்ருள்.

பசு மரத்து ஆணியைப் பிடுங்க முடியுமா? கல்லைக் கரைக்க வல்லார் யார்? ஏன், கல்லையுங் கரைத்து விடலாம், ஜெயசந்தனின் மனத்தைக் கரைக்க யாரா லாகும்? ஆகவே, இதனைக் கேட்டதும் அன்னவன், அலட்சியமும் ஆத்திரமும் பொங்க, "இனிமேலா! தந்தை சொல்லைத் தட்டி நடக்கும் தனயை இருந்தா லென்ன? இறந்தா லென்ன? அவர்கள் முகத்திலேயும் விழிக்க லாகாதே. நீ அன்று என் எண்ணப்படி நடந் திருந்தாலன்றோ நான் இன்று உன் சொல்லைக் கேட் பேன். மேலும் நீயா எனக்குப் புத்தி சொல்வது? போதும். வெள்ளம் கரைபுரண்டு விட்டது. இனி யொன்றும் செய்யமுடியாது. வேண்டுமானால் நீயென் உதரத்து உத்தாதிபாதலின் உனக்கு உயிர்ப் பிச்சை யிடுகிறேன்" என்றான். சம்யுக்தை உடனே சின மிகுந்தவளாய் "ரஜபுத்திர சிங்கத்தை மணந்த யான் நாய்போல் உம்மிடம் உயிர்ப் பிச்சை கேட்கவா வந்தே னென்று நினைத்தீர். பளா! பளா! வெகு நேர்த்தி! நான் உம்மிடம் வந்ததே பிசகு" என்று தைரியமாய்ச் சொல்லியும் தன்னையே நொந்துகொண் டும் உடனே அவ்விடம் விட்டுப் புறப்பட்டுவிட்டாள்.

டில்லிவந்து சேர்ந்தவுடன் சேவகர்களிற் சிலரை யழைத்து தகனமாகும் மண்டபத்தினிற் சீக்கிரம் அக்கினியெழுப்புமாறு ஆக்ஞாபித்தாள். அக்கி

ணமே தன் வாழ்க்கையை வெறுத்தாள். 'கணவன் போய்விடுவா' னென்று நிச்சயந் தெரியு மாதலின், உடனே அக்கினிக் கிரையாக ஆயத்தமானாள். அவளு டன் அனேக ரஜபுத்திர ஸ்திரீகள் தங்கள் கணவரும் சமருக்குச் சென்றுளா ராதலின் அக்கினிப் பிரவேச மாகத் தயாராயினர். அம்மம்மா! ரஜபுத்திரப் பெண் களின் சீலந்தா னென்னே! மேலே சொன்னவாறு ஸ்திரீ ரத்தினங்க ளெல்லாம் ஒருங்கு சேர்ந்து தீக்கு ளிக்குமிடம் வந்து ஒருவர் பின் ஒருவராய்த் தத்தம 'கடமையை முடிக்கிறோ' மென்ற எண்ணத்தால் எழுந்த ஆனந்தத்தோடு உள்ளும் புறமும் குளிர்ந் தவராய்த் தங்கள் தாயிடம் சேரும் குழந்தைகளைப் போலத் தீயிடம் சங்கமமாயினர். ஆஹா! அத னைக் கண்ணுற்றவர்களுக்கு அவர்கள் ஏதோ ஒளிந்து விளையாடுபவர் போல் 'தீயுள் தம்மை ஒளித்துக் கொள்ளச் சென்றனரோ' வெனத் தோற்றியதே யன்றி, 'அந்தோ தீயில் விழுகின்றனரே, பாவம் இறந்துபோய் விடுவார்களே' யெனச் சிறிதேனும் தோற்ற வில்லை. அவ் விரத்தினங்கள் அழிந்தவுடன் ரஜபுத்திருடைய மதிப்பு எவ்வாறு நிற்கும்?

நிற்க, பொழுதும் விடிந்து அருக்கனும் ரஜபுத் திர மகிமை யழிய வேண்டிய காலம் கிட்டிவிட்டதால் எங்கேதான் சரியானநேரம் வராவிடின் காலந்தப்பித்

தன் கடமை பிசகி நடந்ததாற்றன் இத்தீங்கு நிகழ்ந் ததெனக் கூறும் பழிவருமோ வெனப் பயந்து புறப்பட்டு விட்டான். ஆஜ்மீருக் கருகே, துருக்க சேனையும், பிருதிவியின் படைகளுங் கைகலந்தன. மிகவும் கொடுமையாய் யுத்தம் நடந்தது. இதில் பிருதிவி ராஜனைச்ஜெயசந்தனே தன் வாளுக்கிரையாக்கினன். அவ்வரசனும் கொஞ்சமேனும் அச்சமின்றித் தைரியமாய்ச் சமர்க் களத்திலேயே உயிர் நீத்தனன். ரஜபுத்திர மகிமையும் அக்கணமே செலவு பெற்றுக் கொண்டது. மகம்மது கோரி டில்லியையும் ஆஜ்மீரையும் பிடித்துக் கொண்டான். எனினும்,"கழுதைக் குத் தெரியுமோ கற்பூரவாசனை" யென்றபடி தான் ஜெயித்த நாட்டை ஆளும் அருமையறியாது அழியக் கூடிய இம்மைப்பொருளுக்காகவே யுத்தத்திற்கு வந்தவனுதலின், அவன் அவ்விரு நாட்டையும் கொள்ளையடித்துக் கொண்டு சென்றன்.

இதன்பிறகு, ஜெயசந்தன் தானே ரஜபுத்திரர்களுக் கெல்லாம் 'சக்ரவர்த்தி'யெனப் பட்டந்தரித்துக் கொண்டு, சந்தோஷப் பட்டுக்கொண் டிருந்தான். ஆனல்,அற்பனின் வாழ்வுசொற்பநாளைக்குத் தானே பிறர்க்குத் தீங்கு நினைத்துப் புரிந்தோன் தானும் தீங்கை யனுபவியாமற் போய்விடுவானே? வினை யாரை விட்டது? ஆகவே சில வருஷங்களுக்குப் பின் மகம்

மதுகோரி, மறுபடியும் இந்துஸ்தானம் வந்து கன்னோசியை யெதிர்த்தான். இருவருக்கும் போர் நடந்தது. அதிற் ஜெயசந்தன் புறங்கொடுத்தோட அவனைத் தன் ஆட்களால் மறுபடியும் பிடித்து, "கோரி கங்கையி லுயிருட னெறிந்து விடுங்க" ளென்றுகட்டளை யிட்டான். அதன்படியே செய்தும் ஆயிற்று. எந்தக் கோரி இவனுடன் கூட்டுறவாயிருந்து இவனுடைய தீய எண்ணத்தை நிறைவேற்றினனோ, அந்தக் கோரியே இவனுடைய தீவினை யோர் உருவெடுத்தது போல் வந்து, இவனைத் தண்டித்தனன். 'தீமை விதைத்தோன் தீமை யறுப்பா' னென்பதிற் சந்தேகமென்ன? ஆகவே, இதுகாறும் மிகவும் புகழுள்ளதாய் எந்த அரசனும் கிட்ட அணுக அஞ்சும் படியா யிருந்த நம் பாரத நாடு ஒற்றுமை யில்லா ஓர் குறைவினல் சீர் குலைந்து வேற்றரசுக்கு இருப்பிட மாயிற்று. நம் விதியை நாம் தானே நொந்து கொள்ள வேண்டும். இந்த:இந்து அரசர்களுக்குப் பிறகு இந்தியா அமைதியா யிருக்கவே யில்லை. இது வரை இந்துக் களுக்குரிய "கமலத்வஜம்" ஆடிக் கொண்டிருந்த இடத்தில் மஹம்மதியர்க் "குரிய பிறைக்கொடி" யாடுவதாயிற்று.

ரஜபுத்திர ரத்தினம் முற்றிற்று.

சென்னைக் கிறிஸ்தவகலாசாலைத்
தலைமைத் தமிழ்ப் பண்டிதராயிருந்த
மான், வி. கோ. சூரியநாராயணசாஸ்திரியார். பி. ஏ.
அவர்கள் இயற்றிய
நூல்கள்.

தமிழ்மொழியின் வரலாறு:— இது தமிழ்பாஷையின் தோற்றம், தொன்மை, வளர்ச்சி, வேறுபாடு, சரித்திர முதலியன கூறும் ஓர் அரிய நூல். தமிழர் யாவருக்கும் இன்றியமையாதது. (துணி அட்டை யிட்டது.) விலை ரூ 2.

ரூபாவதி அல்லது காணாமற்போனமகள்:— இது ஐந்து அங்கமுள்ளதோர் நவீன நாடகம். ஆடவர், பெண்டிர், அனைவரும் எளிதில் வாசித்துணரத்தக்கது: துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டது. விலை ரூ 1.

மானவிஜயம்:— அங்கம் என்னும் அவலச்சுவை வாய்ந்த ஓர் தமிழ் நாடகம். செய்யுளாகவே இயன்றது. இதன் விலை அணா 8.

நாடகவியல்:— இது ஓர் நாடகத் தமிழ் இலக்கண நூல். நாடகாசிரியர்க்கு மிகவும் இன்றியமையாதது. 2[illegible] சூத்திரங்களடங்கியது. பி. ஏ. பரீக்ஷைக்கு பாடமானது. விலை அணா 8.

தனிப்பாசுரத்தொகை:— 41 தனிப்பாசுரங்கள் அடங்கியதோர் உறுதி நூல். விலை அணா 4.

ஷை ஜி. யூ. போப்பையரவர்கள் ஆங்கில பாஷையில் இயற்றிய செய்யுட்களும் சேர்ந்தது. (துணி அட்டை யிட்டது.) விலை ரூ 1.

5. **பாவலர் விருந்து:**— பண்டிதரும், பாமரரும், படித்துணர்ந்து பயன் பெறத்தக்கது. விலை அணா 8.

ஷை (துணி அட்டை யிட்டது.) ரூ 1.

7. ஸ்ரீமணியசிவனார் சரித்திரம்:—இது ஓர் மகாஞான யோகீசுரரது புண்யசரித்திரம். விலை அணா 2.

8. மதுரை மாலை:—இஃது மதுரைச் சபாபதி முதலியார் அவர்களால் இயற்றப் பெற்றது. செய்யுளாகவே இயன்றுளது. விலை அணா 0—1—6.

9. சிறுவர்க்காதம் கதைப்பூங்கொத்து:—இது கதாகுஸுமமஞ்சரீ என்னும் வடமொழி நூலின் மொழிபெயர்ப்பு. சிறியோர், பெரியோர், ஆடவர், பெண்டிர், அனைவரும் படித்து மகிழத்தக்கது. மாணவர்க்கும், உபாத்தியாயர்க்கும் இன்றியமையாதது. காலஞ்சென்ற ஸ்ரீமான் வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் பி. ஏ. அவர்களின் குமாரர் வி. சூ. நடராஜ சாஸ்திரியார் எழுதியது. விவேகோதயத்தினின்றும் பிரசுரித்தது. துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டது. விலை அணா 0—2—6.

10. ரஜபுத்திர ரத்தினம்:—இது ஓர் சரித்திர சம்மந்தமான தமிழ்க்கதை. சிறியோர், பெரியோர் அனைவரும் படித்து மகிழத்தக்கது. காலஞ்சென்ற பி. ஏ. பிரணதார்த்திஹர சிவனார் பி. ஏ. அவர்கள் குமாரன் பி. ராமச்சந்திரன் என்பவரால் இயற்றப்பட்டது. இதன் விலை அணா [illegible]

குறிப்பு:—வியாபாரிகளுக்குத் தகுந்த கமிஷன் தரக்கூடும்; வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதி பெற்றுக்கொள்ளவும்.

வி. சூ. சுவாமிநாதன்.

735. காக்காத்தோப்புத் தெரு,

மதுரை.